# புதிய ஜனநாயகம்

செப்டம்பர் 2015
ரூ.10.00




# குடி ஆட்சி காக்கும் தடி ஆட்சி






சென்னையில்...



சென்னையில்...




சென்னையில்...




சென்னையில்...



வேதாரண்யத்தில்...



நெல்லையில்...



# "மூடு டாஸ்மாக்கை!" போர்க்களமான தமிழகம்!!

சென்னையில்...



பூவிருந்தவல்லியில்...




புழல் சிறை முற்றுகை



உடுமலையில்...

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

# தமிழகத்தில்

# பொறுக்கி அரசியலின் பரிணாம வளர்ச்சி!

ஓராண்டுக்குள் இரண்டாவது முறையாக மீண்டும் ஒருமுறை ஆளும் ஜெயா-சசி கும்பலுடைய அடிமை விசுவாசிகளின் அமளி-துமளி, அட்டகாசம்-அராஜகக் கூத்துகளை எவ்வித எதிர்ப்புமின்றி தமிழ்நாடு கண்டிருக்கிறது. இடையிடையே அக்கும்பலின் விடுதலைக்காக அதே அடிமை விசுவாசிகளின் அனைத்து மதப் பிரார்த்தனைகள், யாகங்கள்-பூசைகள், பால்குடம்-தீச்சட்டிகள், பரிகாரங்கள், தாடி-மொட்டை-தற்கொலைகள், இரண்டு இடைத்தேர்தல்கள் ஆகிய கோமாளிக் கூத்துகளையும் தமிழ்நாடு கண்டிருக்கிறது. இவையெல்லாம் தமிழக மக்களையும் பொதுச் சொத்தையும் அந்தக் கட்சிக்காரன்கள் கொள்ளையடித்துச் சேர்த்த பணத்தைக் கொண்டு சாராயத்தையும், கறி பிரியாணியையும், சில்லறைக் காசையும் வாரியிறைத்துச் செய்தவை.

இந்தப் பட்டியலில் கடைசியாக இடம் பெற்ற, தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு எதிராக ஆளுங் கட்சியினர் ஆடிய அருவருக்கத்தக்க கோமாளிக் கூத்து, அவர்களின் தலைமையே திட்டமிட்டு உத்திரவு போட்டு அரங்கேற்றியதாகும். இது, எதிர்க்கட்சிகள் ஏற்கெனவே குற்றஞ்சாட்டுவதைப் போல அரசு டாஸ்மாக் சாராயக் கொள்ளைக்கு எதிராகத் தமிழக மக்கள் கொந்தளித்து, எழுச்சியுற்று நடத்திவரும் போராட்டங்களால் தனிமைப்பட்டிருக்கும் ஜெயா-சசி கும்பல் அதிலிருந்து மக்கள் கவனத்தைத் திசை திருப்புவதற்காகச் செய்யப்படும் சதிதான் என்பதில் சந்தேகமில்லை. அதனால்தான், டாஸ்மாக் சாராயக் கடைகளை மூடக் கோரும் போராட்டங்கள் தமிழகமெங்கும் உச்சகட்டத்தில் இருந்தபோது வெடித்தன அ.தி.மு.க. காலிகளின் இளங்கோவன் எதிர்ப்பு அராஜகங்கள். சட்டமன்றம் கூடுவதற்கு முதல் நாள் அவற்றை நிறுத்திக் கொள்ளும்படி ஜெயா-சசி கும்பல் உத்தரவு போட்டது.

கடந்த ஆகஸ்டு இரண்டாம் வாரம் நடந்த மோடி-ஜெயா சந்திப்பு குறித்து ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கீழ்த்தரமாகப் பேசிவிட்டார் என்பதைக் காரணங்காட்டி, ஒருவாரம் கழித்து, ஆளுங்கட்சிப் பொறுக்கிக் கூட்டம் முன்னாள் அரசு தலைமை வழக்கறிஞர், முன்னாள் அரசு ஊழியர் தேர்வாணையர், இன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், எல்லாவற்றையும் விட ஜெயா-சசி கும்பலுடைய சொத்துக் குவிப்பு வழக்கறிஞர் நவநீத கிருட்டிணன் தலைமையில் திரண்டு இளங்கோவன் அலுவலகத்தையும் வீட்டையும் தாக்க முனைந்துள்ளது. ஜெயா-சசி கும்பலிடம் தனக்குரிய விசுவாசத்தைக் காட்டுவதற்காக ஆளுங்கட்சிப் பொறுக்கிகள் போட்டி போட்டுக் கொண்டு, தமிழ்நாட்டில் நினைத்த இடங்களிலெல்லாம், நினைத்த நேரங்களில் போராட்டங்கள் என்ற பெயரில் தமது காலித் தனங்களைக் கட்டவிழ்த்து விட்டார்கள்; இளங்கோவன் உருவ பொம்மைகளைக் கொளுத்தினார்கள். அவர் படங்களைச் செருப்பால், துடைப்பத்தால் அடித்தார்கள்; ஆபாச வசவுகளால் அர்ச்சனை செய்தார்கள்.

பல மணி நேரங்கள் சாலைப் போக்குவரத்தை முடக்கினார்கள். சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயா-சசி கும்பலைத் தண்டித்த பெங்களூரு சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹாவுக்கு எதிராக நாய், பன்றிகளை வைத்து அசிங்கப்படுத்தியதைப்போல மீண்டும் செய்தார்கள். தங்கள் பங்கிற்கு பா.ஜ.க. பரிவாரங்களும் இளங்கோவன் எதிர்ப்பு கலவரங்கள் நடத்தினர். குடிதண்ணீர், சாலைவசதி கேட்டும், டாஸ்மாக் சாராயக்கடைகளையும்

தொடர்ச்சி 34-ஆம் பக்கம்...

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 30 இதழ்: 11**
**செப்டம்பர் 2015**

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: மு.துரை

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# குடி ஆட்சி
## காக்கும்
# தடி ஆட்சி!

> தமிழக அரசும் நீதிமன்றங்களும், “சாராய பாட்டிலைப் பொதுச் சொத்தாகவும், ஊத்திக் கொடுப்பதை அரசுப் பணியாகவும்” அறிவிக்கும் அளவிற்குத் துணிந்திருப்பது, அரசு இயந்திரம் முழுவதும் எதிர்நிலை சக்தியாக மாறியிருப்பதை எடுத்துக் காட்டுகிறது. இப்படிபட்ட அரசிடம் மனு கொடுத்துக் காத்திருப்பது தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

**த**மிழக அரசின் நிறுவனங்களுள் ஒவ்வொரு ஆண்டும் அசாத்தியமான வளர்ச்சியைச் சாதித்துவரும் ஒரே நிறுவனம் டாஸ்மாக்தான். 2002-03 ஆம் ஆண்டுகளில் 2,828 கோடி ரூபாயாக இருந்த டாஸ்மாக்கின் வருமானம் 2014 -15 ஆம் ஆண்டுகளில் 26,295 கோடி ரூபாயாக அதிகரித்திருக்கிறது. இந்த ஆண்டு 30,000 கோடி ரூபாயை இலக்கு வைத்து டாஸ்மாக் அதிகாரிகளும் மாவட்ட கலெக்டர்களும் ‘உழைத்து’ வருவதாகச் செய்திகள் வருகின்றன. தமிழக மக்களில் ஆகப் பெரும்பான்மையினரைக் குடிகாரர்களாக்கி, அந்த எச்சில் காசில் வயிறு வளர்க்கிறது தமிழக அரசு.

தமிழகத்தில் 6,835 டாஸ்மாக் கடைகள் இருப்பதாக 2013-இல் அறிவித்தது, டாஸ்மாக். மாவட்ட கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் ரேஷன் கடைகளைத் தவிர்த்துவிட்டு, தமிழக அரசே நேரடியாக நடத்தும் ரேஷன் கடைகளின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், அது டாஸ்மாக் கடைகளின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பகுதிதான். இது ‘குடி’ ஆட்சி என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.

மகசூல் டிரஸ்ட் என்ற தன்னார்வ அமைப்பு கடந்த ஆகஸ்டு மாதம் வெளியிட்டுள்ள ஒரு மாதிரி புள்ளிவிவரத்தில், ‘‘தமிழக ஆண்களில் 1 கோடியே 32 இலட்சம் பேர் குடிப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களுள் 53 சதவீதம் பேர் தினமும் குடிக்கிறார்கள். இப்படி தினமும் குடிப்பவர்களுள் 64 சதவீதம் பேர் தங்கள் மனைவி, குழந்தைகளை அடிக்கிறார்கள்’’ என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

தினமும் குடிப்பவர்கள் மாதமொன்றுக்கு சராசரியாக 6,552 ரூபாய் குடிக்குச் செலவழிப்பதாகப் அப்புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்தச் செலவை மாதச் சம்பளம் வாங்கும் நடுத்தர வர்க்க குடும்பத்தாலே தாங்க முடியாது எனும்பொழுது, தினக்கூலி குடும்பங்களின் கதி அதோகதிதான். ஒரு தினக்கூலிக்கு நாளொன்றுக்கு அதிகபட்சமாக நானூறு ரூபாய் கூலி கிடைக்கலாம். அவருக்கு மாதத்தில் இருபது நாட்கள் வேலை கிடைப்பதே அரிதுதான் என்றாலும், அதன்படி கணக்கிட்டால், அவருக்கு 8,000 ரூபாய் மாத வருமானமாகக் கிடைக்கும். இதில் முக்கால் பங்கைத் தமிழக அரசு டாஸ்மாக் மூலம் பறித்துக் கொள்கிறது. இந்த மானக்கேடான கொள்ளையை நிறுத்தக் கூறினால், ‘‘இது கொள்ளை இல்லை, கொள்கை’’ என்று தமிழக அரசும் நீதிமன்றங்களும் எகத்தாளமாக விளக்கமளிக்கின்றன.

அடித்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பங்கள் குடியினால் பெரும் பொருளாதார இழப்பை மட்டும் சந்திக்கவில்லை. கணவனின் குடிப்பழக்கம் அடித்தட்டு வர்க்க குடும்பப் பெண்களின் மீது கூடுதல் உழைப்புச் சுமையை ஏற்றிவைத்திருப்பதோடு, அவர்களின் நிம்மதியையே பறித்துவிட்டிருக்கிறது. அடி, உதை,

குடிப்பழக்கத்தின் விபரீதம்: வீட்டிற்குக் கூட்டிப் போகவேண்டிய தந்தை குடிபோதையில் மேட்டூர் பேருந்து நிலையத்திலேயே மயங்கிச் சரிந்துவிட, என்னவென்று புரியாமல் பச்சிளம் குழந்தை முழிக்க, அதனின் அக்கா பயத்தில் வீறிட்டு அழும் இக்கொடுமைக்கு இந்த அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும்.



சந்தேகம் என அப்பெண்கள் சந்திக்கும் வன்முறைக்கும், அவமானத்திற்கும் நரகத்தைக்கூட ஒப்பாகச் சொல்லமுடியாது. சென்னையில் உள்ள நொச்சிக்குப்பம் பகுதியைச் சேர்ந்த மீனவப் பெண்கள் இதற்கு வகைமாதிரியாக வாழ்ந்து வருவதை ஆனந்த விகடன் இதழில் வெளிவந்து கொண்டிருக்கும் ‘‘குடி குடியைக் கெடுக்கும்’’ தொடரில் பதிவு செய்திருக்கிறார், பாரதி தம்பி.

அரியலூருக்கு அருகில் உள்ள சுத்தமல்லி என்ற சிறிய கிராமத்தில் மட்டும் குடிப்பழக்கத்தினால் குடும்பத் தலைவனை இழந்து நிர்க்கதியாக நிற்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 16. 450 குடும்பங்கள் உள்ள கச்சிராயநத்தம் கிராமத்தில் (கடலூர் மாவட்டம்) இந்த எண்ணிக்கை 105. கள்ளச்சாராய மரணங்களுக்குக் கணக்கு வைத்திருக்கும் அரசு, இந்த ‘நல்ல’ சாராய மரணங்களைத் திட்டமிட்டே கணக்கில் கொண்டு வராமல் புறக்கணிக்கிறது. இந்த அகால மரணங்கள் ஒருபுறமிருக்க, கணவனின் குடிப்பழக்கம் மனைவியைத் தற்கொலை செய்து கொள்ள வைத்திருக்கிறது. கணவனையே கொலை செய்யும் அளவிற்குத் தள்ளியிருக்கிறது. ஒரு சில குடும்பங்களில் கணவனின் குடிப்பழக்கம் மனைவி, குழந்தைகள் என அனைவரையும் தொற்றுவியாதி போல பற்றிக் கொண்டிருக்கிறது. இன்று தமிழகத்துப் பெண்களிடம், குறிப்பாக அடித்தட்டு வர்க்கப் பெண்களிடம் காணப்படும் மிகப் பெரும் அச்சம் என்ன தெரியுமா? ‘‘குழந்தைகளை இந்த அரசு எதிர்காலத்தில் குடிக்கு அடிமையாக்கி விடுமோ?’’ என்பதுதான்.

## துணைவேந்தரின் அடாவடி!



பேராசிரியர்
இராமு மணிவண்ணன்

சென்னைப் பல்கலைக்கழக அரசியல் அறிவியல் துறை மாணவர்கள் டாஸ்மாக் கடைகளை மூடக் கோரி நடத்திய போராட்டத்தை ஆதரித்து, அவர்களைக் காட்டிக் கொடுக்க மறுத்த காரணத்திற்காக, அத்துறையின் தலைவராக இருந்த பேராசிரியர் இராமு மணிவண்ணன் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அப்பதவி நீக்கத்தை நியாயப்படுத்துவதற்கு அவர் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை அடுக்கியிருக்கிறது, சென்னைப் பல்கலைக்கழகம். அவரை மீண்டும் அப்பதவியில் அமர்த்தக் கோரி போராடிய மாணவர்களுள் 10 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், அத்துறையின் அரசியல் அறிவியல், பொது நிர்வாகம், சர்வதேச பொது நிர்வாகம் தொடர்பான வகுப்புகள் அனைத்தும் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

விழாக்களின் போதும், எழவின் போதும் ஒதுக்குப்புறமாக நடந்து வந்த குடிப்பழக்கம், இன்று பள்ளிக்கூடம், வழிபாட்டுத்தலங்கள், நடுத்தெரு எனப் பொது இடங்களைக்கூட விட்டுவைக்கவில்லை. கூலியோடு குவார்ட்டர் பாட்டிலும் சேர்த்துக் கொடுக்கும் அளவிற்கு இச்சீரழிவு வேர்விட்டு வளர்ந்து நிற்கிறது. ஒரு சிறு குழந்தைக்கு அவனது தாய் மாமனே ஊத்திக் கொடுக்கும் அளவிற்கு மனித புத்தியைப் பேதலிக்கச் செய்துவிட்டது. பிரட்டிஷ் ஏகாதிபத்தியம் சீனாவை அடிமைப்படுத்த அபினியைப் பயன்படுத்தியதைப் போல, இன்றைய மறுகாலனியாதிக்கச் சூழலில் தமிழக மக்களை அடிமைப்படுத்த மதுப் பழக்கம் பயன்படுத்தப்படுகிறது.

தாலியை அறுக்கும் டாஸ்மாக் கடைகளை மூடக் கோரி, சாராயப் பாட்டில்களைத் தாலிக்கொடி போலத் தொங்கவிட்டு, சென்னை - பட்டினப்பாக்கம் பகுதி பெண்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்.



இந்தப் பின்னணியிலிருந்துதான் டாஸ்மாக் கடைகளை மூடக் கோரியும், முழுமையான மதுவிலக்கு கோரியும் புரட்சிகர, ஜனநாயக இயக்கங்களும், பல்வேறு சமூக அமைப்புகளும் போராடுவதையும்; இப்போராட்டங்களில் பெண்கள் முன்நிற்பதையும் பார்க்க வேண்டும். குணமாக்க முடியாத அளவிற்கு சீழ்பிடித்துப் போன உடல் பாகங்களை வெட்டி உயிரைக் காப்பாற்றும் மருத்துவ சிகிச்சை போல, ‘‘குடிநாடாக’’ச் சீரழிந்து நிற்கும் தமிழகத்தைக் காக்க முழுமையான மதுவிலக்கு தவிர, வேறெந்த சமரசமும் பயன்படாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

●●●

தமிழகத்தில் டாஸ்மாக்கை மூடக் கோரும் போராட்டங்கள் இரு வேறு தளங்களில் நடைபெற்று வருகின்றன. சசிபெருமாள் போன்ற தன்னார்வலர்கள், பாதிக்கப்பட்ட பொதுமக்களைத் திரட்டி அரசிடம் கோரிக்கை வைக்கும் போராட்டங்களை நடத்தி வரும் வேளையில், மக்கள் அதிகாரம் என்ற ஜனநாயக அமைப்பு, ‘‘ஊற்றிக் கொடுக்கும் அரசிடம் கெஞ்சிப் பலனில்லை; நாமே அதிகாரத்தைக் கையிலெடுத்து டாஸ்மாக் கடைகளை மூட வேண்டும்’’ என்ற புதிய திசைவழியில் பிரச்சாரத்தையும், போராட்டத்தையும் நடத்தி வருகிறது. இந்த நிலையில்தான் சசிபெருமாள் மரணமும், புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி தலைமையேற்று நடத்திய பச்சையப்பன் கல்லூரி மாணவர் போராட்டமும் டாஸ்மாக்கிற்கு எதிரான போராட்டத்தை முன்னெப்போதும் இல்லாத வகையில் எரியும் பிரச்சினையாக்கின. அதுவரையில் இப்பிரச்சினை குறித்துப் பேசாத எதிர்க்கட்சிகளைக்கூடப் பேசும்படி செய்தன.



‘‘எங்கள் ஊரில் டாஸ்மாக் கடை தேவையில்லை’’ என ஊராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பிறகும், அதனை மதிக்காமல் நடத்தப்பட்டு வந்த டாஸ்மாக் கடையை அடித்து நொறுக்கும் கலிங்கப்பட்டி கிராம மக்கள்.

இந்த இரண்டு தளங்களில் நடந்துவரும் போராட்டங்களையும் குடிகெடுக்கும் ஜெயா அரசு அடக்குமுறைகளின் மூலமே ஒடுக்கத் துணிகிறது. அதிகாரத்தை மக்கள் தமது கையில் எடுத்துக்கொள்ளக் கூறிய மக்கள் அதிகாரம், பு.மா.இ.மு. அமைப்புகளை மட்டுமல்ல, சட்டத்திற்குட்பட்டுப் போராடி உயிர்நீத்த சசிபெருமாளையே வன்முறையாளர் எனச் சாடினார், அம்மாவின் அடிமை நத்தம் விசுவநாதன். சசிபெருமாள் காந்தியவாதியே கிடையாது என வன்மத்துடன் தலையங்கம் தீட்டியது, அம்மாவின் கூஜா தினமணி நாளேடு. சட்டத்தைக் கையிலெடுத்துக் கொள்ள யாருக்கும் அதிகாரம் கிடையாது எனப் பொங்கியெழுந்தார்கள், கருத்து கந்த சாமிகள்.

இந்த ஆட்சி அகிம்சை வழியிலும் சட்டப்படியும்தான் நடந்து கொள்கிறதா என்ற கேள்வியை உங்களுக்குள்ளேயே கேட்டுப் பாருங்கள். உண்ணாமலைக் கடை பேரூராட்சியில் பள்ளிக்கூடம் மற்றும் வழிபாட்டுத் தலங்களின் அருகாமையிலிருந்த டாஸ்மாக் கடையை அகற்றக் கோரி அப்பகுதி மக்கள் கிட்டதட்ட மூன்று வருடங்களாகப் போராடி வந்தனர். அக்கடையை அங்கிருந்து தூக்குமாறு மதுரை உயர்நீதி மன்றக் கிளை ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பே அர

# தொடை நடுங்கிப் போன அரசு!

சென்னை அருகேயுள்ள பூவிருந்தவல்லியில் அமைந்துள்ள அண்ணா மேநிலைப்பள்ளி மாணவர்கள் கடந்த 7.8.2015 அன்று பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் அவர்களை விடுதலை செய்யக் கோரியும் சாலை மறியல் போராட்டத்தைத் துணிந்து நடத்தினர். பள்ளிச் சிறுவர்கள் என்றுகூடப் பாராமல் அம்மாணவர்களை அடித்துத் துரத்திய போலீசு, எட்டு மாணவர்களைச் சிறை பிடித்துச் சென்றது.

போராட்டம் நடந்த அன்று மாலை 3.30 மணிக்கே பள்ளியை முடிக்குமாறு உத்தரவிட்ட போலீசு, வெளியே வந்த மாணவர்கள் அனைவரையும் வீடியோ பதிவு செய்து பயமுறுத்தியது. மேலும், 11 மற்றும் 12-ஆம் வகுப்பு வருகைப் பதிவேடுகளைப் பிடுங்கிக்கொண்டு சென்று, எந்தெந்த மாணவனெல்லாம் வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டு போராட்டத்தில் கலந்துகொண்டான் எனத் துருவித் துருவி ஆராய்ந்தது.

இதற்கு அப்பால், 11 மற்றும் 12- ஆம் வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களை மிரட்டுவதற்காகவே மீட்டிங் நடத்தவும் போலீசே ஏற்பாடு செய்தது. அந்த மீட்டிங்கில் போலீசு உதவி ஆணையர், பகுதி சட்டமன்ற உறுப்பினர் மணிமாறன், மாவட்டக் கல்வி அதிகாரிகள் - என ஒரு பெரும் பட்டாளமே கலந்து கொண்டு, ‘‘நான்கு மாணவர்களுக்கு டி.சி. கொடுக்கப் போகிறோம். இனிமே போராடினா எல்லோருக்குமே டி.சி.தான்’’ எனத் தொடை தட்டினர்.

பூவிருந்தவல்லியைத் தொடர்ந்து சென்னை - மதுரவாயல் பகுதியில் அரசு மேநிலைப்பள்ளி மாணவர்களும் சாலை மறியல் போராட்டத்தை நடத்தினர். இப்போராட்டத்திலும் தடியடி நடத்திய போலீசு, போராட்டத்தை முன்னின்று நடத்திய மாணவர்களை போலீசு நிலையத்திற்கு இழுத்துச் சென்று மிரட்டியது. அப்பள்ளியில் எட்டாம் வகுப்பு பயிலும் ஆகாஷ் என்ற மாணவன்தான்

சுக்கு உத்தரவிட்டிருந்தது. மக்களின் நியாய மான, சட்டத்திற்குட்பட்ட போராட்டத்தை மட்டுமல்ல, நீதிமன்றத்தின் தீர்ப்பையும் ஜெயா அரசு அலட்சியப்படுத்தியது. ''மாற்று இடம் தேடிக் கொண்டிருக் கிறோம்'' என்ற ஒரே பொய்யைக் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் திரும்பத் திரும்பக் கூறி, போராடிய மக்களை எள்ளி நகை யாடியது.

''எங்கள் ஊருக்கு டாஸ்மாக் கடை தேவையில்லை; அதனை அகற்றுங்கள்'' என கலிங்கப்பட்டி ஊராட்சி மன்றம் தீர் மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியது. அத்தீர்மானத்தை கழிப்பறை காகிதம் போலக் கசக்கி எறிந்தது, ஜெயா அரசு. மக் களின் பெயரால் நடக்கும் ஆட்சியில் மக்கள் உரிமை ஏதும் அற்ற ஏதிலிகளாக நிறுத்தப் பட்டார்கள். மக்களை மதிக்காத இந்த அலட்சியத்தின், திமிரின் எதிர்விளைவாகத் தான் கலிங்கப்பட்டி டாஸ்மாக் கடை பொது மக்களால் அடித்து நொறுக்கப்பட்டது.



''டாஸ்மாக் கடைகளை மூடும் முடிவை அரசு அறிவிக்காமல் சசிபெருமாள் சடலத்தை வாங்கப் போவதில்லை'' என அறிவித்து சசிபெருமாள் குடும்பத்தினரும் அவரது ஆதரவாளர்களும் சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டுக்காடு பகுதியில் நடத்திய உண்ணாவிரதப் போராட்டம்.

அதேபொழுதில் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியின் தலைமையில் திரண்ட பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் ஹாரிங்டன் சாலை டாஸ்மாக் கடையை அடித்து நொறுக்கியதும்; மக்கள் அதிகாரம் தலைமையில் விருத்தாசலத்திலும், அதன் அருகிலுள்ள மேலப்பாலையூர் கிராமத்திலும், கோவை சாய்பாபா காலனியிலும் டாஸ்மாக் கடைகள் தாக்கப்பட்டதும் அந்த நேரத்தில் நடந்த உணர்ச்சி வயப்பட்ட போராட்டங்கள் அல்ல. மாறாக, அதி காரத்தை மக்கள் தமது கையிலெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அரசியல் உணர்வால் உந்தப்பட்டு நடந்த போராட்டங்கள் அவை.

சென்னையில் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி நடத்திய போராட்டத்தில் 600-க்கும் மேற் பட்ட பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் பங் கெடுத்துக் கொண்டனர். அம்மாணவர்கள் மீது தமிழக போலீசு நடத்திய கொடூரத் தாக்குதல் ஆங்கிலேயர்

இப்போராட்டத்திற்கு மாணவர்களை அணிதிரட்டியதை அறிந்துகொண்ட பள்ளி தலைமையாசிரியர், ஆகாஷ் தவிர மற்ற மாணவர்களின் பெற்றோர்களை போலீசு நிலையத் திற்கு வரவழைத்து, அவர்களிடம் ஆகாஷை அடையாளங் காட்டி, ''உங்க பையன அவனோடு சேர விடக் கூடாது'' என மிரட்டியுள்ளார். போலீசின் எடுபிடிகளாகிப் போன அப்பள்ளி ஆசிரியர்கள், ''போராட்டம் நடத்தின அத்தனை பேருக்கு டி.சி. கொடுத்துவிடுவோம்'' என்றும் உதார் காட்டினர்.

சாலை மறியல் நடத்திய மாணவர்கள் மீது தடியடி நடத்தி, பலவந்தமாக அவர்களைக் கைது செய்தபோதிலும் ஆவேசமாக முழக்கமிடும் மதுரவாயல் அரசு மேநிலைப்பள்ளி மாணவன் ஆகாஷ்.



திருவள்ளூர் மாவட்டத்தில் பூவிருந்தவல்லி, மதுரவாயல் எனப் பற்றத் தொடங்கிய பள்ளி மாண வர்களின் போராட்டத்தைத் தடுப்பதற்கு மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி தலைமையில் அரசுப் பள்ளி தலைமையாசிரியர்களின் கூட்டம் நடத்தப் பட்டது. பள்ளிக்கல்வித் துறை செயலர் கண்ணப்பன், ''பள்ளி மாணவர்கள் போராட்டத்தில் இறங்குவதைத் தடுக்கும் பொறுப்பைத் தலைமை யாசிரியர்களும், வகுப்பாசிரியர்களும் எடுத்துக் கொள்ள வேண்டும்'' என எச்சரித்து பள்ளிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பினார். தலைமையாசிரியர் களின் மீட்டிங், மாணவர்களையும் பெற்றோர் களையும் மிரட்டுவது என்ற இந்த சூரத்தனங்கள் எல்லாம் வெளிப்பார்வைக்கு ''டெரர்'' ஆகத் தோன்றினாலும், உண்மையில் மாணவர்களின் போராட்டத்தைக் கண்டு ஜெயா அரசு தொடை நடுங்கி நிற்பதைத்தான் காட்டுகின்றன.

களின் காலனி ஆட்சியை நினைவுபடுத்துகிறது. பொதுமக்கள் பார்க்கிறார்கள், தொலைக்காட்சி ஊடகங்களில் ஒளிபரப்பாகும் என்பது பற்றியெல்லாம் கவலைப்படாமல் அம்மாணவர்களை லத்தியாலும், இரும்புக் குழாயாலும் தாக்கியது, போலீசு. ஒரு இளம் பெண்ணின் மார்பின் மீது தனது பூட்ஸ் காலால் எட்டி உதைத்தது, இன்னொரு போலீசு மிருகம். ஜெயா-மோடி சந்திப்பை விமர்சித்து காங்கிரசு தலைவர் இளங்கோவன் பேசியது ஆபாசமென்றால், அதிகாரத் திமிரெடுத்து ஒரு இளம் பெண்ணை மார்பில் எட்டி உதைப்பதை வன்முறையாக மட்டும் பார்க்க முடியாது.

•••

கலிங்கப்பட்டி போராட்டத்துக்குத் தலைமையேற்ற வை.கோ. உள்ளிட்டு அப்பகுதி மக்கள் மீதும் கொலைமுயற்சி, பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்தல் உள்ளிட்டு 12 பிரிவுகளின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. இதேபோல மேலப்பாலையூர் போராட்டத்துக்குத் தலைமையேற்றிருந்த மக்கள் அதிகாரம் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு, அக்கிராம மக்கள் மீதும்; விருத்தாசலம், கோவை சாய்பாபா காலனி போராட்டங்களை நடத்திய மக்கள் அதிகாரம் அமைப்பு தோழர்கள் மீதும்; சென்னை போராட்டத்தை நடத்திய பு.மா.இ.மு. தோழர்கள், கல்லூரி மாணவர்கள் மீதும் கொலை முயற்சி உள்ளிட்டு 10 பிரிவுகளின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய வன்முறை, அடக்குமுறைகளின் மூலம் டாஸ்மாக்கிற்கு எதிரான போராட்டத்தை ஒடுக்கிவிடலாம் என மனப்பால் குடித்தது, ஜெயா அரசு. ஆனால், அவர்களின் கனவு குளவிக் கூட்டில் கையை வைத்தவன் கதையாக முடிந்து போனது. இந்த அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு., வி.வி.மு., உள்ளிட்ட புரட்சிகர இயக்கங்களும் மக்கள் அதிகாரம் அமைப்பும் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் டாஸ்மாக் கடைகளை முற்றுகையிட்டு போராட்டங்களை நடத்தின. அவ்வமைப்புகள் முன்வைத்த முழக்கங்களை, கோரிக்கைகளைத் தமது சொந்த கோரிக்கைகளாக எடுத்துக் கொண்ட வழக்குரைஞர்கள், பொதுமக்கள், கல்லூரி -

# தமிழக போலீசின் வக்கிரம்!

மது விலக்கை அமல்படுத்தவும், சசி பெருமாள் மரணத்திற்கு நீதி விசாரணை கோரியும் மாற்றுத் திறனாளிகள் அமைப்பான டிசம்பர் 3 இயக்கம் கடந்த 04.08.2015 அன்று சென்னை கடற்கரையிலுள்ள உழைப்பாளர் சிலை அருகே உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர். மறுநிமிடமே அவர்களைக் கைது செய்த போலீசு, ராயப்பேட்டையில் அடிப்படை வசதிகளே இல்லாத சத்துணவு கூடத்தில் அடைத்தது. அங்கு கழிப்பிட வசதி, குடிநீர் கேட்டு அவர்கள் போராடவே, இதைவிட வேறு நல்ல இடத்தில் தங்க வைப்பதாகக் கூறி அவர்களை வேனில் ஏற்றிய போலீசார், கொட்டும் மழையில் சேப்பாக்கம் ரயில்வே மேம்பாலத்தின் கீழே வாகனத்தை நிறுத்தி, ''கிளம்பி போறதா இருந்தா போங்கடா.. இல்லாட்டி இங்கேயே கிடந்து சாவுங்கடா..'' என்றுத் திமிராகவும் கேவலமாகவும் திட்டி வக்கிரமான முறையில் அவர்களை நடுத்தெருவில் இறக்கிவிட்டுவிட்டு ஓடிவிட்டனர்.




சென்னை சேப்பாக்கம் ரயில்வே மேம்பாலத்தின் கீழே உண்ணாவிரதமிருந்த டிசம்பர் 3 இயக்கத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகளைச் சந்தித்து, அவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின்.

இறக்கிவிடப்பட்ட இடத்திலேயே, கொட்டும் மழையையும் பாராது தமது உண்ணாவிரதப் போராட்டத்தை மீண்டும் தொடங்கிய அவர்கள் அப்போராட்டத்தை 7-ஆம் தேதிவரையில் நடத்தினர். அதன் பிறகு, ஆக-15 அன்று அரசிடமிருந்து 'நல்ல செய்தி' வரும் என்ற எதிர்பார்ப்பில் காத்திருப்புப் போராட்டமாக தொடர்ந்தனர். அவர்கள் எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகவே, மீண்டும் உண்ணாவிரதப்போராட்டத்தைத் தொடங்கி, அதனை ஆக-20 ஆம் தேதிவரை தொடர்ந்தனர்.

அவர்களின் போராட்டத்தை அலட்சியப்படுத்திய தோடு,''மத்தவனாலேயே புடுங்க முடியல, நொண்டிப் பய நீ என்னத்த புடுங்கப் போற'' என அவர்களின் ஊனத்தைக் குத்திக்காட்டும் வகையில் வக்கிரமாகப் பேசி இழிவுபடுத்தியது ஜெயா போலீசு.

பள்ளி மாணவர்கள் எனப் பலதரப்பட்ட பிரிவினரும் நேரடியாகப் போராட்டத்தில் இறங்கி, ஜெயா அரசையும் போலீசையும் பீதி கொள்ள வைத்தனர்.

டாஸ்மாக் கடைகளுக்கும், செல் போன் கோபுரங்களுக்கும் பந்தோபஸ்து போடும் அளவிற்கு ஜெயா அரசு நடுங்கிப் போயிருந்ததைக் கண்டு ஊரே கைகொட்டி சிரித்தது. இந்த பாசிச கோமாளித்தனத்தை நையாண்டி செய்து நூற்றுக்கணக்கான பதிவுகள் முகநூலில் வெளிவந்தன. சாதாரண சுவரொட்டி ஒட்டும் அரசியல் நடவடிக்கைகூட ஜெயா அரசிற்கு கிலியூட்டியது. பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து சுவரொட்டி ஒட்டியதற்காக கரூரைச் சேர்ந்த ஆறு பு.மா.இ.மு. தோழர்களும், சென்னையைச் சேர்ந்த இருவரும் கைது செய்யப்பட்டனர். கோத்தகிரியில், நீலமலை அனைத்துத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த முன்னணியாளர்கள் முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.



கோவை சாயிபாபா காலனியில் உள்ள டாஸ்மாக் கடையை அடித்து நொறுக்கிய மக்கள் அதிகாரம் அமைப்புத் தோழர்கள் மீது நடத்தப்பட்ட போலீசின் தாக்குதலைக் கண்டித்து, ''ஜெயா அரசை வலுப்படுத்த அனைவரும் மது குடிக்க வாருங்கள்'' என்ற நையாண்டி முழக்கத்தை முன்வைத்து புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியைச் சேர்ந்த பெண் தோழர்களால் கோவையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்.

''சென்னையில் போராட்டம் நடத்தியவர்கள் எமது கல்லூரி மாணவர்களே அல்ல'' என பச்சையப்பன் கல்லூரி முதல்வர் போலீசின் கையாளாக மாறி பேட்டியளித்தார். இதற்கு பதிலடி கொடுக்கும்விதமாக பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள், கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்யக் கோரி கல்லூரி வளாகத்திற்குள்ளேயே உள்ளிருப்புப் போராட்டம் நடத்தி போலீசின் முகத்தில் கரியைப் பூசினர். சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட மறுநாளே காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மேலும், சென்னையில் உள்ள கந்தசாமி கல்லூரி, பிரசிடென்சி கல்லூரி, புதுக் கல்லூரி, தியாகராயர் கல்லூரி; குடந்தை அரசு கல்லூரி, வேதாரண்யம் கலைக் கல்லூரி, திருச்சி ஈ.வெ.ரா. கல்லூரி, காங்கேயம் கல்லூரி, டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், நெல்லை, கோவை, மதுரை, திருச்சி சட்டக் கல்லூரிகள் - இங்கெல்லாம் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் டாஸ்மாக்கை மூடக் கோரியும் மாணவர்கள் போராட்டங்களை நடத்தினர். நெல்லை இந்து கல்லூரி மாணவர்கள் போலீசின் அச்சுறுத்தலை மட்டுமல்ல, தேர்வுகளையும் புறக்கணித்துவிட்டு போராடினர்.

மாணவர்கள் நடத்திய இப்போராட்டங்களிலேயே சென்னை-பூவிருந்தவல்லி அண்ணா மேநிலைப் பள்ளி மாணவர்களும் சென்னை-மதுரவாயல் அரசு மேநிலைப்பள்ளி மாணவர்களும் நடத்திய சாலை மறியல் போராட்டங்கள் முத்தாய்ப்பாக அமைந்ததோடு, ஜெயா அரசு எந்தளவிற்குத் தொடை நடுங்கிப் போயிருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டின (பார்க்க பெட்டிச் செய்தி). தருமபுரியிலும் அரசு பள்ளி மாணவர்கள் 200 பேருக்கு மேல் திரண்டு பேருந்து நிலைய வாயிலில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சென்னை வழக்குரைஞர்கள் சங்கம் உயர்நீதி மன்ற வளாகத்திற்குள்ளேயே பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது; மதுரை வழக்குரைஞர்கள் சாலை மறியலை நடத்தினர். கைது செய்யப்பட்ட மாணவர்களும் இளைஞர்களும் போலீசு நிலையத்திலும், சிறைச்சாலையிலும் காக்கிச் சட்டை கிரிமினல்களால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டதைக் கண்டித்து புழல் சிறையின் முன்பாக மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையத்தின் தலைமையில் வழக்குரைஞர்களும், புரட்சிகர அமைப்பினரும் பங்கெடுத்துக் கொண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டம், சாலை மறியல் என்ற வழக்கமான போராட்டங்களுக்கு அப்பால் அரசையும் போலீசையும் திகைக்கச் செய்த நூதன போராட்டங்களை உசிலம்பட்டியிலும், ஓசூரிலும், பென்னாகரத்திலும் மக்கள் அதிகாரம் நடத்தியது. அவ்வூர்களில் டாஸ்மாக் கடைகள் மீது ஏவுகணை போல சாணி வீசியெறியப்பட்டு, வியாபாரம் முடக்கப்பட்டது. குறிப்பாக, பென்னாகரத்தில் சாணி, தக்காளி, முட்டை என நடந்த தாக்குதலின் இறுதிக் கட்டமாக மலம் வீசியெறியப்பட்டது. அதனையும் பொறுத்துக்கொண்டு கடமையுணர்வோடு கடையைக் காத்தது, தமிழக போலீசு. இப்போராட்டங்களின்பொழுது உசிலம்பட்டியில் நான்கு பெண் தோழர்கள் உட்பட 13 பேர் கைது செய்யப்பட்டனர். ஓசூரில் ஒரு பெண் தோழர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுள் ஒருவரான தோழர் முருகேசன் போலீசு நிலையத்தில் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார்.

# வென்றது மக்கள் அதிகாரம்!

**ம**க்கள் அதிகாரம் அமைப்பினர் கடந்த ஜூலை மாதம் தொடங்கியே விருத்தாசலம் பகுதியிலுள்ள பவழங்குடி, மருங்கூர், கீரமங்களம், காவனூர், கீரனூர், மேலப்பாலையூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் ‘‘டாஸ்மாக்கை மூடு! கெடு விதிப்போம் ஆகஸ்டு 31!!’’ என்ற பிரச்சார இயக்கத்தை நடத்தி வந்தனர். இந்த நிலையில்தான் விருத்தாசலம் சந்தைக்கடை பகுதியிலுள்ள டாஸ்மாக் கடை மக்கள் அதிகாரம் அமைப்பைச் சேர்ந்த தோழர்களால் அடித்து நொறுக்கப்பட்டது. இந்த நடவடிக்கை அப்பகுதியில் மக்கள் அதிகாரம் அமைப்பினர் நடத்திவந்த பிரச்சார இயக்கத்தில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. குறிப்பாக, மக்கள் அதிகாரம் அமைப்பின் பிரச்சாரத்தால் ஈர்க்கப்பட்டிருந்த மேலப்பாலையூர் பொதுமக்கள், தமது ஊரிலுள்ள டாஸ்மாக் கடையை உடனடியாக மூடும் போராட்டத்தில் இறங்கத் தயாரானதோடு, அப்போராட்டத்திற்கு மக்கள் அதிகாரம் அமைப்பின் உதவியையும் நாடினர்.



மேலப்பாலையூரில்...

ஆகஸ்டு 4 அன்று காலையில் மக்கள் அதிகாரம் அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜூ தலைமையில் 100 பெண்கள் உள்ளிட்டு 250 பேர் திரண்டு டாஸ்மாக் கடையை நோக்கி ஊர்வலமாகச் செல்லத் தொடங்கினர். கடையின் பாதுகாப்புக்கு இரண்டு போலீசார் நிறுத்தப்பட்டிருந்தபோதும், கடை ஊழியர்கள் பொதுமக்கள் திரண்டு வருவதைப் பார்த்த மாத்திரத்திலேயே கடையைப் பூட்டிவிட்டு ஓடிவிட்டனர். கடை பூட்டப்பட்டிருப்பதைக் கண்ட பொதுமக்கள் டாஸ்மாக் போர்டை அடித்து நொறுக்கி, கடையின் கதவையும் உடைத்தனர். அதன் பின்னர் டி.எஸ்.பி. தலைமையில் வந்த போலீசு படை, ராஜூ, ஓய்வுபெற்ற ஆசிரியர் சிறுதொண்ட நாயனார், வெள்ளாறு பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பஞ்சமூர்த்தி, கீரனூர் ராஜ வன்னியர், பவழங்குடி தெய்வக்கண்ணு, மேலப்பாலையூர் நந்தகுமார் மற்றும் 9 பெண்கள் உள்ளிட்டு 23 பேரைக் கைது செய்தது. போலீசு நிலையத்திலும் போராட்டம் தொடரவே, அன்று மாலையே கைது செய்யப்பட்ட பெண்கள் விடுதலை செய்யப்பட்டு, மற்றவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

போராட்டத்தின் முன்னணியாளர்களைச் சிறைச்சாலையில் அடைத்துவிட்ட இறுமாப்பில் மேலப்பாலையூர் டாஸ்மாக் கடையை மறுநாளே திறப்பதற்குத் தந்திரமாக முயன்றது, அதிகார வர்க்கம். பொதுமக்களை அச்சுறுத்துவதற்காகவே அச்சிறு கிராமத்தில் பெரும் போலீசு பட்டாளம் குவிக்கப்பட்டது. ஆனாலும், அவ்வூர் மக்கள் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் சசிக்குமார் தலைமையில் திரண்டு அதிகார வர்க்கத்தின் முயற்சியை முறியடித்தனர். ‘‘எங்கள் ஊருக்குக் குடிநீர் வேண்டும், எங்கள் பள்ளிக்கூடத்திற்கு ஆசிரியர் வேண்டும், எங்களுக்கு சுகாதார நிலையம் வேண்டும், குடிகெடுக்கும் டாஸ்மாக் வேண்டாம்’’ என வட்டாட்சியர் முன்னிலையில் முழக்கமிட்டு, கடையைத் திறக்க மீண்டும் முயற்சித்தால், எங்கள் போராட்டமும் தொடரும் என எச்சரிக்கை செய்தனர். மக்களின் போராட்டத்தால் அன்று மூடப்பட்ட மேலப்பாலையூர் டாஸ்மாக் கடை இன்று வரை திறக்கப்படவில்லை. எத்தகைய அதிகாரம் கொண்ட அரசாக இருந்தாலும், மக்களின் வலிமை, ஒற்றுமை முன் தூசுதான் என்பதை இந்தப் போராட்டம் நிரூபித்திருக்கிறது.

*மக்கள் அதிகாரம் அமைப்பினர் கோவை சாய்பாபா காலனி பகுதியில் பிரச்சாரம் நடத்தியபொழுது, அதனைத் தடுக்க முனைந்த போலீசின் அத்துமீறல்களைப் பொதுமக்களே துணிந்து கண்டித்தனர். உளவுப் போலீசின் அச்சுறுத்தலைக்கூடப் பொருட்படுத்தாமல், டாஸ்மாக்கால் பொதுமக்களுக்கு ஏற்படும் சங்கடங்களை எடுத்துப் பேசி, போலீசின் வாயை அடைத்தனர். இதற்கு மறுநாள் அந்தக் கடை மக்கள் அதிகாரம் அமைப்புத் தோழர்களால் அடித்து நொறுக்கப்பட, அதில் முன்னணியாக நின்ற 9 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களுள் தோழர்கள் ரகுராம், கிரிஷ், பாபு ஆகிய மூவரும் சிறையில் நிர்வாணச் சோதனையிடப்படுவதை எதிர்த்து நின்றதால், தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டனர்.*

*இப்போராட்டத்தை ஆதரித்தும், போலீசின் வன்முறையைக் கண்டித்தும் கோவை புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியைச் சேர்ந்த பெண் தோழர்களால், குடிகெடுக்கும் ஜெயா அரசைப் பரிகசிக்கும் விதமாக, ‘‘மது குடிக்க வாருங்கள், அரசின் கரத்தை வலுப்படுத்துங்கள்’’ என்ற நையாண்டி முழக்கத்தை முன்வைத்துப் போராட்டம் நடத்தப்பட்டது.*

மக்கள் அதிகாரம் அமைப்பின் பிரச்சாரம் மற்றும் போராட்டத்தால் ஈர்க்கப்பட்ட அரியலூருக்கு அருகிலுள்ள சுத்தமல்லி கிராமப் பொதுமக்கள், தாமே டாஸ்மாக் கடையை மூடக் கோரி பிரசுரங்களை அச்சடித்து, முற்றுகை போராட்டத்தை நடத்தினர். மதுரை யானைமலை ஒத்தக்கடையில் மக்கள் அதிகாரம், வழக்குரைஞர்கள் சங்கம், பொதுமக்கள் ஆகியோர் இணைந்து நடத்திய போராட்டத்தின் பொழுது, ''போலீசு கைது செய்து வழக்கு போட்டால், அவ்வழக்குகளை நாங்கள் கட்டணம் வாங்காமல் நடத்திக் கொடுப்போம். எனவே, அச்சமின்றிப் போராடுங்கள்'' என வழக்குரைஞர்கள் தந்த வாக்குறுதி பொதுமக்களிடம் புதிய உற்சாகத்தை அளித்தது.

இப்பகுதிகள் தவிர, புதுச்சேரியில், விழுப்புரம் சாலமேடு பகுதியில், சென்னை கே.கே. நகரில், நாகர் கோவிலில் - எனத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் புரட்சிகர அமைப்புகளும் மக்கள் அதிகாரமும் இணைந்தும் தனியாகவும் ஆர்ப்பாட்டங்களையும் முற்றுகைப் போராட்டங்களையும் நடத்தின. இப்போராட்டங்களின் முத்தாய்ப்பாக, ஆகஸ்டு 31 அன்று சிறீபெரும்புதூர், விழுப்புரம், மதுரை, திருச்சி, தருமபுரி ஆகிய ஐந்து மையங்களில், ''மூடு டாஸ்மாக்கை! அடக்குமுறையால் தடுக்க முடியாது!!'' என்ற முழக்கத்தை முன்வைத்து பெருந்திரள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கிறது, மக்கள் அதிகாரம்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் திராவிடர் கழகம், தி.மு.க., தே.மு.தி.க., சி.பி.ஐ., சி.பி.எம்., விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், ஆதித் தமிழர் பேரவை, ஆதித் தமிழர் கட்சி, அனைத்து அருந்ததியர் சங்கம், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், திருச்சி காந்தி மார்கெட் அனைத்து வியாபாரிகள் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை, மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பாதுகாப்புக் குழு, பென்னாகரம் வழக்குரைஞர் சங்கம், உயர்நீதி மன்ற வழக்குரைஞர் சங்கம், மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம், ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., ஆகிய கட்சிகள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த முன்னணியாளர்கள் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

இன்னொருபுறத்தில் சசிபெருமாள் மரணத்துக்கு நீதி விசாரணை கோரியும், டாஸ்மாக் கடைகளை மூடக் கோரியும் சசிபெருமாள் குடும்பத்தினரும் அவரது ஆதரவாளர்களும் சசிபெருமாள் சடலத்தை வாங்க மறுப்பது, உண்ணாவிரதம் இருப்பது என்ற வகையில் போராட்டங்களை நடத்தினர். சசிபெருமாள் உடலை அரசே அடக்கம் செய்துவிடும் என மிரட்டியது மட்டுமின்றி, உண்ணாவிரதப் போராட்டத்துக்கு அனுமதி மறுத்து, சசிபெருமாளின் 11 வயது மகள் கவியரசி உள்ளிட்ட 28 பேரைக் கைது செய்து உள்ளே தள்ளியது ஜெயா அரசு.

# டாஸ்மாக் ஊழியர்களே, உங்களைக் கொல்வது மதுவா, மக்கள் போராட்டமா?

டாஸ்மாக் எதிர்ப்பு போராட்டங்கள் தமிழகம் முழுவதும் தீவிரமடைந்திருந்த சூழலில், ஆகஸ்டு 5 ஆம் தேதியன்று இரவு, சேலம்-வாழப்பாடி அருகே மூடியிருந்த டாஸ்மாக் கடை மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டு, செல்வம் என்ற ஊழியர் இறந்துபோனார். ஆகஸ்டு 12 ஆம் தேதியன்று சென்னை தியாகராய நகரில் மாலை நேரத்திலேயே சிலர் வீசிய பெட்ரோல் குண்டின் விளைவாக கடை தீப்பற்றி, அதில் இருந்த ஊழியர் தீக்காயங்களுடன் உயிர் தப்பினார். டாஸ்மாக்கை மூடவேண்டும் என்ற கோரிக்கைக்காகப் போராடுகின்ற யாரும் இத்தகைய முட்டாள்தனமான நடவடிக்கையில் நிச்சயம் ஈடுபட்டிருக்க மாட்டார்கள்.

ஊழியரின் மரணத்தால் கோபம் கொண்ட ஊழியர் சங்கத்தினர் வட மாவட்டங்களில் வேலை நிறுத்தம் அறிவித்தார்கள். ''இரவு நேரத்தில் கடைக்குள் ஊழியர்கள் படுக்க வேண்டும்'' என்று நிர்வாகம் கட்டாயப்படுத்துவதை அவர்கள் எதிர்த்ததில் நியாயம் இருக்கிறது. ஆனால், ''அமைதி வழியில் போராடவேண்டும்'' என்று ஊழியர் சங்கங்கள் போராடும் மக்களுக்கு அறிவுரை கூறினார்கள். அப்புறம் கடை வாசலில் கண்காணிப்பு காமெரா வைக்கவேண்டும், போலீசு பாதுகாப்பு போடவேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள்.

சாராய பாட்டில்களைப் பாதுகாக்கும் பொருட்டு எதையெல்லாம் செய்ய அரசு திட்டமிட்டிருந்ததோ அதையே தங்களுடைய உயிரைப் பாதுகாக்கும் பொருட்டு நிறைவேற்றித் தருமாறு கோரியிருக்கிறார்கள் ஊழியர்கள். அந்த வகையில் டாஸ்மாக் ஊழியர் சங்கங்கள் மக்களுக்கு எதிராக அரசுடன் கைகோர்த்து நின்றன.

குடிப்பழக்கத்தினால் மக்கள் சீரழிவது மட்டுமின்றி, தங்கள் ஊழியர்களே சில ஆயிரம் பேர் இறந்திருப்பதால், ''டாஸ்மாக்கை மூடு, வேறு வேலைவாய்ப்பு கொடு!'' என்று சில மாதங்களுக்கு முன்னர் ஊழியர் சங்கத்தினர் சிலர் கோரிக்கை வைத்திருந்தார்கள். அந்த கோரிக்கை உண்மையாயிருப்பின், இன்று ''டாஸ்மாக்கை மூடு!'' என்று தமிழகமே குரல் கொடுத்து வரும் சூழலில், மக்களுடன் இணைந்து கொண்டு ஊழியர்களும் போராட்டம் அறிவித்திருக்க வேண்டும்.

ஒரு டாஸ்மாக் ஊழியரது உயிர் பெட்ரோல் குண்டினால் பறிக்கப்பட்டது வருந்தத்தக்கதுதான். ஆனால், ஆண்டுதோறும் ஓராயிரம் ஊழியர்களும், பல்லாயிரம் மக்களும் மதுவினால் மடிகின்றார்களே, அது குறித்த அக்கறை ஊழியர் சங்கங்களுக்கு இருந்தால், டாஸ்மாக்கை மூடும் போராட்டத்தில் அவர்கள் மக்களுடன் அல்லவா இணைந்து கொள்ள வேண்டும்? நாட்டு நலனுக்கு உட்பட்டதுதானே ஊழியர் நலன்?




''மூடு டாஸ்மாக்கை! அடக்குமுறையால் தடுக்க முடியாது!!'' என்ற முழக்கத்தை முன்வைத்து மக்கள் அதிகாரம் அமைப்பால் ஆகஸ்டு 31 அன்று திருச்சி (இடது) மற்றும் மதுரையில் நடத்தப்பட்ட பெருந்திரள் ஆர்ப்பாட்டம்.

ம.தி.மு.க., விடுதலைச்சிறுத்தைகள், மனிதநேய மக்கள்கட்சி இணைந்து 4.8.2015 அன்று முழு அடைப்புப் போராட்டத்தை நடத்தின. இப்போராட்டத்திற்கு தே.மு.தி.க., காங்கிரசு, இடது, வலது கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆதரவு தெரிவித்தன. தி.மு.க. ஆக.10 அன்று தமிழகம் தழுவிய அளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. இடது கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் அமைப்பும், மகளிர் அமைப்பும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

தி.மு.க.வின் பொருளாளர் மு.க.ஸ்டாலின், தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், மனித நேய மக்கள் கட்சியின் பொதுச் செயலர் ஜவாஹிருல்லா, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், ம.தி.மு.க. பொதுச்செயலர் வை.கோ., புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி, தமிழ் மாநில காங்கிரசின் மூத்த துணைத் தலைவர் ஞானதேசிகன் உள்ளிட்டோர் சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மாணவர்களைச் சந்தித்துத் தமது ஆதரவைத் தெரிவித்ததோடு, அவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து அறிக்கைகளும் வெளியிட்டனர். அ.தி.மு.க.வுடன் கள்ளக்கூட்டு வைத்துள்ள பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்திரராஜனும் புழல் சிறைக்கு வந்து ஆஜர் போட்டுவிட்டுப் போனார். தி.மு.க. நடத்திய மதுவுக்கு எதிரான மகளிர் அணி கருத்தரங்கில் மாணவர்களை விடுதலை செய்யக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஓட்டுக்கட்சிகளின் இந்த ஆதரவும் போராட்டங்களும் டாஸ்மாக்கிற்கு எதிரான மக்களின் கோபம் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியதன் விளைவாக ஏற்பட்டவை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறாக, கடந்த ஆகஸ்டு மாதம் நெடுகிலும் குடிகெடுக்கும் ஜெயா அரசிற்கு எதிரான போர்க்களமாக தமிழகம் சிவந்து நின்றது. மக்கள் அதிகாரமும் இன்னபிறரும் நடத்திய போராட்டங்கள் ஜெயா அரசின் பாசிச திமிரை மட்டுமல்ல, நீதிமன்றங்களின் கைக்கூலித்தனத்தையும் அம்பலப்படுத்திவிட்டன. அரசின் அடக்குமுறைகள், உறுதியான போராட்டங்களை உடைக்க முடியாமல் தோற்றுப் போனதை எடுத்துக் காட்டின.

எனினும், இந்தப் போராட்டச் சூழல் மக்கள் முன்வைக்கும் கேள்வி, டாஸ்மாக்கை முற்றிலுமாக ஒழித்துக் கட்டுவதற்கு எந்தப் பாதையைத் தேர்ந்தெடுப்பது - ஓட்டுக்கட்சிகளை நம்புவதா, அரசிடம் மனு கொடுத்துக் காத்திருப்பதா, அல்லது இதையெல்லாம் ஒதுக்கிவிட்டு, மக்கள் அதிகாரம் முன்வைக்கும் அதிகாரத்தைக் கையில் எடுத்து டாஸ்மாக்கை மூடச் சொல்லும் புதிய பாதையைத் தேர்ந்தெடுப்பதா - என்பதுதான்.

இந்திய அரசியல் சட்டத்தின் 47 ஆவது பிரிவு ''மதுவிலக்கை அமல்படுத்துவது அரசின் கடமை'' என்கிறது. ஆனால், தமிழக அரசோ சரக்கு விற்பதை அரசின் கொள்கை என்கிறது. எந்தச் சட்டத்தை அரசு பின்பற்ற வேண்டுமோ, அதற்கு எதிராக அரசே திரும்பிவிட்ட சூழ்நிலையை நாம் எதிர்கொண்டு நிற்கிறோம். டாஸ்மாக் விவகாரத்தில் மட்டுமின்றி, ஆற்று மணல் கொள்ளை, தாது மணல் கொள்ளை, நிலத்தடி நீர்க் கொள்ளை ஆகியவற்றிலும் மக்கள் நலன், சமூக நலனுக்கு எதிராக அரசு மாறிவிட்டதைத்தான் காண்கிறோம்.

எங்கள் ஆற்று மணலை அள்ளாதே, எனது தெருவில் டாஸ்மாக் கடையை அமைக்காதே எனக் கூறுவதற்கான உரிமை மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ள இச்சூழலில், அவ்வுரிமையை மீட்டெடுப்பதன் மூலம்தான் இந்தப் போராட்டத்தில் நாம் வெற்றி கொள்ள முடியும். மக்கள் அதிகாரம் இந்தக் கடமையைத்தான் தமிழக மக்கள் முன்வைக்கிறது. இந்தக் கடமைக்குக் குறைவாக ஓட்டுக்கட்சிகளாலும் மற்ற பிற சமூக அமைப்புகளாலும் குட்டி முதலாளித்துவ அறிவுஜீவிகளாலும் முன்வைக்கப்படும் தீர்வுகள் - நாங்கள் ஆட்சிக்கு வந்தால் டாஸ்மாக்கை மூடுவோம் என்ற வாக்குறுதிகள்; நீதிமன்றங்களின் மூலம் தீர்வு காண முயலுவது போன்றவை - இவற்றைத் தீர்மானிக்கும் உரிமையை மீண்டும் அரசிடமும் அதிகார வர்க்கத்திடமும் ஒப்படைக்கின்றன. இத்தகைய தீர்வுகள் புண்ணுக்குப் புனுகு தடவும் நிவாரணம் போன்றவை என்பது மட்டுமல்ல, அவை நம்பகத்தன்மை அற்றவையும் ஆகும்.

● திப்பு

# சசிபெருமாள் தவறு செய்துவிட்டார்; அவர் ஏறியிருக்க வேண்டியது செல்போன் கோபுரமல்ல, உயர் நீதிமன்றக் கோபுரம்!

ஜெயா அரசுக்கு எதிராகப் போராடுகின்றவர்களை ஒடுக்குகின்ற போலீசு அவுட் போஸ்டாக மாறிக் கொண்டிருக்கிறது, சென்னை உயர்நீதி மன்றம்.

சசி பெருமாளை மரணத்துக்குத் தள்ளியது தமிழக அரசுதான் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. ஆனால், உயர் நீதிமன்றமும் சேர்ந்துதான் அவரை மரணத்துக்குத் தள்ளியது என்ற உண்மையை யாரேனும் மறுக்க முடியுமா? சட்டத்தின் மீதும், நீதிமன்றத்தின் மீதும் நம்பிக்கை வைத்து மூன்றாண்டு காலம் அவர் போராடினார். ''உண்ணாமலைக்கடை டாஸ்மாக்கை அகற்ற வேண்டும்'' என்று ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னரே உயர் நீதிமன்றம் உத்தரவும் பிறப்பித்து விட்டது. ''நீதிமன்ற உத்தரவை அமல்படுத்து'' என்றுதான் சசி பெருமாளும் அந்த ஊர் மக்களும் போராடினார்கள்.

தனது உத்தரவு அமலாகவில்லை என்பது நீதிமன்றத்துக்குத் தெரியாதா? தெரியும். விதியை மீறி நெடுஞ்சாலைகள், பள்ளிகள் அருகில் அமைக்கப்பட்டிருக்கும் கடைகளை அகற்றுமாறு உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு எதையும் தமிழக அரசு அமல்படுத்தவில்லை என்பது எல்லா நீதிபதிகளுக்கும் தெரியும். தனக்குத் தேவையென்றால், தானாக முன்வந்து (suo motu) நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கும் நீதிபதிகள், டாஸ்மாக் விவகாரத்தில் ஒரு இடத்தில் கூட அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கவில்லை. இது நீதிமன்றம் தெரிந்தே செய்திருக்கும் குற்றம்.

சசி பெருமாள் உயிர் துறந்த பிறகாவது, தன்னுடைய குற்றத்தை உயர் நீதிமன்றம் ஒப்புக் கொண்டிருக்கிறதா? சசி பெருமாளை மரணத்துக்குத் தள்ளிய அரசைக் கண்டித்து உயர் நீதிமன்றம் ஒரு வார்த்தையாவது பேசியதா? சசி பெருமாளின் மரணத்துக்குப் பின்னராவது, சட்டவிரோதமான கடைகள் அனைத்தையும் மூடுமாறு தமிழக அரசுக்கு அறிவுறுத்தியதா? எதுவும் இல்லை. அதனால்தான் சொல்கிறோம். நீதிமன்றத்தை நம்பிக் கெட்ட சசி பெருமாள், உயர் நீதிமன்றக் கோபுரத்தின் மீது ஏறியிருந்தால், அவரைச் சாவுக்குத் தள்ளிய குற்றத்தில் உயர் நீதிமன்றம் தமிழக அரசின் கூட்டாளி என்பது அம்பலமாகியிருக்கும்.

•••

இன்று தமிழகத்தில் நடைபெற்று வரும் டாஸ்மாக் எதிர்ப்புப் போராட்டங்களைக் கவனித்துப் பாருங்கள். பெண்கள் திரண்டு வந்து கடைகளை மறிக்கிறார்கள், பூட்டுகிறார்கள், சாணி அடிக்கிறார்கள். மாணவர்களும் இளைஞர்களும் மதுப்புட்டிகளை நொறுக்குகிறார்கள். அதிகாரிகளிடம் மனுக் கொடுத்தோ, நீதிமன்றத்தில் வழக்குப் போட்டோ ஒருக்காலும் நியாயம் கிடைக்காது என்பதுதான் இப்போராட்டங்களின் வாயிலாக மக்கள் கூறும் செய்தி.

செல்ஃபோன் கோபுரத்திலிருந்து குற்றுயிரும் குலையுயிருமாகக் கீழிறக்கப்பட்ட சசிபெருமாள்.



இதனைக் கண்ட பிறகாவது நீதிமன்றம் சட்டத்தை அமல்படுத்த முயற்சிக்கிறதா? இல்லை. போராடும் மக்களுக்கு எதிராக, பொதுச்சொத்துக்கு சேதம், கொலை முயற்சி என்று போலீசு போடும் பொய் வழக்குகளை எந்த விதத்திலும் கேள்விக் குள்ளாக்காமல், அநீதி என்று தெரிந்தே அனைவரையும் சிறைக்கு அனுப்புகிறது. எந்தக் கடைகளையெல்லாம் அகற்ற வேண்டும் என்று நீதிமன்றம் கூறியதோ அந்தக் கடைகள் போலீசு பாதுகாப்புடன் நடத்தப் படுவதை நீதிமன்றம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கம் நீதிமன்ற

உத்தரவை மதிப்பது இருக்கட்டும்; உயர் நீதிமன்றம் தான் போட்ட ஆணையைத் தானே மதிப்பதில்லை. உயர் நீதிமன்றத்துக்குச் சுயமரியாதையும் இல்லை; சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தாக்கத்தின் மீதும் அதற்கு மரியாதையும் இல்லை.

•••

''சட்டத்தை மீறும் உரிமை'' என்பது சட்டம்-ஒழுங்கின் காவலர்கள் என்று கூறப்படும் போலீசுக்கும், சட்டத்தை இயற்றும் அரசுக்கும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டப் பொறுப்பேற்றிருக்கும் தங்களுக்கும் மட்டும்தான் உண்டு. ''குடிமக்களுக்கு மட்டும் சட்டத்தை மீறும் உரிமை கிடையாது'' என்பதுதான் 'சட்டத்தின் ஆட்சி' குறித்து மாட்சிமை தங்கிய நீதி அரசர்கள் கொண்டிருக்கும் கருத்து. இதற்கும் மக்களை மிரட்டி லஞ்சம் வசூலிக்கும் ஒரு கான்ஸ்டபிளின் கருத்துக்கும் பெரிய வேறுபாடு இல்லை.

பச்சையப்பன் கல்லூரியின் வாசலிலேயே டாஸ்மாக் கடை இருக்கிறது. இந்தச் சட்ட மீறல் தலைமை நீதிபதிக்கு அதிர்ச்சியூட்டவில்லை. அந்தக் கடை மீது மாணவர்கள் கல்லெறிந்தால், உடனே அவர் அதிர்ச்சியடைகிறார். போராட்டக் களத்தில் கீழே விழுந்து கிடந்த ஒரு மாணவியின் வயிற்றில் ஒரு போலீசு அதிகாரி எட்டி உதைப்பதை தொலைக்காட்சியில் கண்ட அனைவரும் கண்டிக்கின்றனர். ''மாணவர்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது'' என்று எச்சரித்த தலைமை நீதிபதிக்கு, 'சட்டத்தைத் தனது காலில் எடுத்துக் கொண்டு'அந்த போலீசு அதிகாரி நடத்திய தாக்குதல் தவறாகவே தெரியவில்லை.

•••

உயர் நீதிமன்றத்தின் நிலையே இதுவென்றால் மாஜிஸ்டிரேட்டுகளைப் பற்றி சொல்லவும் வேண்டுமா? இப்போதெல்லாம் போலீசு காவலுக்கும் நீதிமன்றக் காவலுக்கும் இடையில் எந்த வேறுபாடும் தெரிவதில்லை. கைதியை ரத்தம் சொட்டச் சொட்ட கொண்டுவந்து நிறுத்தினாலும், ''இ.பி.கோ.12345'' என்று இல்லாத சட்டப்பிரிவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்தாலும் நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டு கைதிகளை ரிமாண்டுக்கு அனுப்புகிறார்கள் மாஜிஸ்டிரேட்டுகள்.

மாணவர்களுடைய காவல் 15 நாட்களுக்கு மேல் நீட்டிக்கப்படுவதை ஆட்சேபித்து, உச்ச நீதிமன்றத் தீர்ப்பை எடுத்துக் கூறி, கேஸ் டயரியைப் பரிசீலிக்குமாறு வழக்குரைஞர் கேட்டதற்கு, ''போலீசை எதற்கு கேட்கவேண்டும், நானே ரிமாண்டை நீட்டிக்கிறேன்'' என்று ஆணவமாகப் பேசுகிறார் கயல்விழி என்ற எழும்பூர் மாஜிஸ்டிரேட். அபத்தமும் உளறலுமாக எழுதப்பட்டிருக்கும் அந்த அம்மையாரின் ரிமாண்டு உத்தரவைப் பார்த்த மாத்திரத்தில் அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் சிபாரிசு செய்திருக்க வேண்டும். மாறாக, அந்த கேலிக்கூத்தான உத்தரவு ''செல்லத்தக்கதே'' என்று தீர்ப்பளிக்கிறார் உயர்நீதிமன்ற நீதிபதி ராஜேந்திரன்.

•••

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் வீதியிலும்,போலீசு காவலிலும், சிறையிலும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். உளவுத்துறை அதிகாரி ஒருவர் பெண்கள் சிறைக்குள் அத்துமீறி நுழைந்து மாணவிகளை மிரட்டியிருக்கிறார். நீதிமன்றக் காவலில் இக்குற்றங்கள் நடந்திருப்பதால், அந்த மாணவ-மாணவிகளை நேரில் அழைத்து உயர் நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்று ''ஆட்கொணர்வு மனு'' போட்டோம். காதல்-கள்ளக்காதல் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்களில் சம்மந்தப்பட்டவர்களை நேரில் அழைத்து மிகுந்த ஈடுபாட்டுடன் விசாரிக்கும் உயர் நீதிமன்றம், போலீசால் துன்புறுத்தப்பட்ட மாணவ-மாணவிகளை மட்டும் அழைத்து விசாரிக்க மறுத்துவிட்டது.

ஆனால், நீதிபதிகள் தமிழ்வாணன், சி.டி.செல்வம் ஆகியோரைக் கொண்ட அமர்வுதான், மதுரை வழக்கறிஞர் சங்க நிர்வாகிகளை வரச் சொல்லி குற்றவாளிகளைப் போல அவமானப்படுத்தியது. இதை எதிர்த்த மதுரை வழக்குரைஞர்கள் நீதிபதி சி.டி.செல்வம் கிரானைட் மாபியாவிடம் சோரம்போனதையும், சர்வதேச உப்புமா பல்கலைக் கழகத்தில் நீதிபதி தமிழ்வாணன் டாக்டர் பட்டம் பெற்றதையும் அம்பலப்படுத்தி நீதிமன்ற வாசலிலேயே முழக்கமிட்டனர். நீதித்துறை ஊழலுக்கு எதிரான இயக்கத்தைத் தொடங்கி, ஊழல் நீதிபதிகளின் பட்டியலை வெளியிடவிருப்பதாகவும் அறிவித்தனர்.

•••

அரசமைப்புச் சட்டத்தின் விதி 47, ''மது விலக்கை அமல்படுத்துவது அரசின் கடமை'' என்கிறது. இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 324, ''தெரிந்தே மனித உடலுக்குத் தீங்கு

வழக்கு விசாரணைக்காக விருத்தாசலம் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்ட மக்கள் அதிகாரம் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜு மற்றும் மேலப்பாலையூர் கிராம மக்கள்.



விளைவிக்கும் இத்தகைய குற்றங்களுக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை'' என்று கூறு கிறது. இவையெல்லாம் நீதிபதிகளுக்குத் தெரி யாதவையல்ல. அரசமைப்புச் சட்டத்தின் மீதான நம்பிக்கையை விட, அரசு அதிகாரத்து டனும் ஆளும் கட்சியுடனும் அனுசரித்துப் போவதால் கிடைக்கக்கூடிய ஆதாயங்களின் மீதுதான் நீதிபதிகளுக்கு நம்பிக்கை இருக்கிறது.



தம் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை ரத்து செய்யக் கோரி எழும்பூர் நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே முழக்கமிடும் மாணவிகள்.

அதனால்தான், ''டாஸ்மாக்கில் விற்கப் படும் மதுவுக்கு தரக்கட்டுப்பாடு இல்லை'' என்று ஆதாரங்களுடன் ஒருவர் பொதுநல வழக்கு போட்டால், அதனை அலட்சியப் படுத்துகிறது உயர் நீதிமன்றம். ''கடைகளின் விற்பனை நேரத்தைக் குறைக்க வேண்டும்'' என்று மனுப் போட்டால், ''அப்படியெல்லாம் தலையிட நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை'' என்கிறார் தலைமை நீதிபதி.

ஆனால், 7 கோடி மக்களுடைய மண்டையின் மீது தலையிடுவதற்கு மட்டும் அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறதாம். தலைக்கவசத்தைத் திணிப்பதற்கும், அணியத் தவறுகிறவர்களுடைய வாகனங்களைப் பிடுங்குவதற்கும், இந்தத் தீர்ப்பை விமரிசித்த மதுரை வழக்குரைஞர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுப்பதற்கும் நீதிபதிகள் தயங்குவதில்லை.

தங்களுடைய நேர்மையின்மையையும் கோழைத் தனத்தையும் கண்டு வழக்குரைஞர்களும் வழக்காடி களும் கைகொட்டிச் சிரிக்கிறார்கள் என்று தெரிந்தும், ஆளும் கட்சியின் நிழலில் ஒண்டிக்கொண்டு, 23-ஆம் புலிகேசியைப் போல கூச்சமே இல்லாமல் கம்பீரமாக வலம் வருகிறார்கள் இந்த நீதியரசர்கள்.

•••

டாஸ்மாக் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட' 'மக்கள் அதிகாரம்'' அமைப்பைச் சேர்ந்தவர்களுக்குப் பிணை வழங்குவதற்கு நீதிபதி வைத்தியநாதன் விதித் திருக்கும் நிபந்தனைகள் குற்றவியல் நீதி வழங்கு நெறி களுக்கே (criminal jurisprudence) எதிரானவை. பிணை பெறுவதற்கு மேலப்பாலையூர் விவசாயிகள் 10,000 ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டுமென்றும், விருத்தாசலத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவன் 50,000 ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டு மென்றும், இந்தத் தொகையை புகார்தாரரான டாஸ்மாக் நிர்வாகத்திடம் இப்போதே கொடுத்துவிட வேண்டுமென்றும் உத்தரவிட்டிருக்கிறார் நீதிபதி வைத்தியநாதன்.

குற்றம் சாட்டப்பட்ட நபர் குற்றவாளிதானா என் பதும், இழப்பு எனக் கூறப்படும் தொகை உண்மை தானா என்பதும் விசாரணைக்குப் பின்னர் தீர்ப்பில்தான் தெரியவரும். சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றம் நிரூ பிக்கப்பட்டு நான்காண்டு சிறையும், 100 கோடி அபராதமும் விதிக்கப்பட்ட ஜெயலலிதாவுக்கு பத்து ரூபாய் கூட டெபாசிட் விதிக்காமல் பிணை தருகிறார் தலைமை நீதிபதி தத்து. 20,000 கோடி வரி ஏய்ப்பு செய்த நோக்கியா நிறுவனம் வெறும் 200 கோடியை டெபாசிட் செய்து விட்டு, ஆயிரக்கணக்கான தொழி லாளிகளை வேலைநீக்கம் செய்து ஆலையை மூடு வதற்குத் தோதாக தீர்ப்பளிக்கிறார் நீதிபதி ராஜேந்திரன்.

ஆனால், சாராய பாட்டிலை உடைத்த குற்றம் நிரூ பிக்கப்படுவதற்கு முன்னரே, அட்வான்சாக 50,000 ரூபாய் அபராதம் விதித்து ஒரு மாணவனுக்கு நீதி வழங் கப்படுகிறது. இது மனுநீதி அல்லாமல் வேறென்ன?

•••

பச்சையப்பன் கல்லூரி மாணவ- மாணவிகள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்திய போலீசார், சத்திய மூர்த்தி பவன் மீது அ.தி.மு.க. குண்டர்கள் கல்வீச்சு நடத்தும்போது காவல் நிற்கிறார்கள். ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு எதிராக நடக்கும் காலித்தனங்களை முன்னாள் தமிழக அட்வகேட் ஜெனரல் நவநீத கிருஷ்ணன் தலைமையேற்று நடத்துகிறார். அண்ணா சாலையும் பூந்தமல்லி நெடுஞ்சாலையும் மணிக் கணக்கில் மறிக்கப்படுகின்றன. தமிழகம் முழுவதும் காங்கிரசு அலுவலகங்கள் தாக்கப்படுகின்றன.

இவற்றையெல்லாம் ''அறப்போராட்டம்'' என்று வருணிக்கிறார் முதலமைச்சர். அது தலைமை நீதிபதி யின் காதில் விழவில்லை. ''சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது'' என்று மாணவர்களை எச் சரித்த தலைமை நீதிபதியின் காதுகளில், 'சட்டத்தை வாயில் எடுத்துக் கொண்டு' அ.தி.மு.க. காலிகள் பொழியும் வசைமாரியும் விழவில்லை.

காங்கிரசு தலைவர் இளங்கோவனுக்கு எதிராக வேண்டுமென்றே தொடுக்கப்பட்ட ஒரு பொய்வழக் கில், அவரை மதுரையில் தங்கி கையெழுத்துப் போடச் சொல்கிறார் நீதிபதி வைத்தியநாதன். அங்கே போலீசு பாதுகாப்புடன் அவர் மீது தாக்குதல் நடக்கிறது. அதனைக் கண்டிக்காத நீதிபதி வைத்தியநாதன், ''அடக்கமாக நடந்துகொள்ளுமாறு'' இளங் கோவனுக்கு அறிவுரை கூறுகிறார்.

முதல்வரைப் பற்றி இளங்கோவன் பேசிய வார்த்தைகள் அ.தி.மு.க.வினரிடம் அறச்சீற்றத்தை தோற்றுவித்திருக்கும் என்ற காரணத்தினால் உயர் நீதிமன்றம் அடக்கி வாசிப்பதாக யாரும் எண்ணிவிட வேண்டாம். குன்ஹாவின் தீர்ப்பைத் தொடர்ந்து அ.தி.மு.க. குண்டர்கள் அரங்கேற்றிய ரவுடித்தனத்துக்கும், நீதிபதி குன்ஹாவுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்புக்கும் எதிராக சென்னை உயர் நீதிமன்றம் எடுத்த நடவடிக்கை என்ன? ஹெல்மெட் விவகாரத்தில் நீதிமன்றம் அவமதிக்கப் பட்டுவிட்டதாகத் துடிக்கும் நீதிபதிகள், 'மதிப்பு' என்ற சொல்லின் பொருளை ஆங்கில அகராதியைப் படித்தாவது புரிந்து கொள்வது நல்லது.

•••

**அ**.தி.மு.க.வினர் அண்ணாசாலையை மறித்து வெறியாட்டம் போடுவதை கண்டுகொள்ளாத உயர் நீதிமன்றம், தே.மு.தி.க. சாலையோரமாக நின்று மனிதச் சங்கிலி போராட்டம் நடத்தினால், மக்களுக்கு ஏற்படக்கூடிய சிரமம் குறித்து ஆராய்ச்சி நடத்துகிறது. விசாரணையை கடைசி நேரம் வரை இழுத்தடித்து போராட்டத்துக்கு அனுமதி மறுத்த போலீசின் நோக்கத்தை நிறைவேற்றித் தருகிறது.




டாஸ்மாக்கை மூடக் கோரிப் போராடிய மக்கள் அதிகாரம், சென்னை மாணவர்கள், மேலப்பாளையூர் கிராம மக்களுக்கு நிபந்தனையற்ற பிணை தர மறுத்த நீதிமன்றங்களின் கைக்கூலித்தனத்தை அம்பலப்படுத்தி சென்னை உயர்நீதி மன்ற வழக்குரைஞர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

சட்டவிரோதமான டாஸ்மாக் கடைகளை மூடத் துப்பில்லாத உயர் நீதிமன்றம், நெய்வேலி தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் போராட்டத்தை 'சட்ட விரோதம்' என்று தீர்ப்பளிக்கிறது. ஸ்ரீரங்கம், ஆர்.கே. நகர் இடைத்தேர்தல்கள் முதல் பச்சையப்பன் கல்லூரி வாயில் வரையில் எல்லா இடங்களிலும் அ.தி.மு.க.வினரின் கிரிமினல் குற்றங்களும் போலீசின் அத்துமீறல்களும் தொலைக்காட்சி காமெராக்களின் முன் துணிச்சலாக அரங்கேற்றப்படுகின்றன. அனைத்தையும் மவுனமாக அங்கீகரிக்கிறது உயர் நீதிமன்றம்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னால், உயர் நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே அ.தி.மு.க. மகளிர் அணி அரை நிர்வாண நடனம் நடத்தியது. இன்று உயர் நீதிமன்றமே அப்படி நடனமாடுவதைக் காண்கிறோம்.

•••

**ஆ**ற்று மணல், கிரானைட், தாது மணல் கொள்ளை வழக்குகளைக் கையாண்ட நீதிபதிகள் பலர் கனிமவளக் கொள்ளைக்கு ஆதரவாகத் தீர்ப்பளிக்கிறார்கள். ''இந்த தீர்ப்புகள் பற்றி சகாயம் குழு பரிசீலிக்க வேண்டும்'' என்று முன்னாள் நீதிபதி சந்துரு நாளேடு ஒன்றில் கட்டுரை எழுதிய பின்னரும் நீதிபதிகள் யாருக்கும் கோபம் வந்ததாகத் தெரியவில்லை. மாறாக, ''முழுதும் நனைந்தவனுக்கு முக்காடு எதற்கு'' என்று வெளிப்படையாகவே இறங்கி விட்டார்கள்.

மதுரையில் கடந்த மார்ச் மாதம் கிரானைட் கொள்ளைக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்த நீதிபதி ராஜா, சென்னையில் ஜூலை மாதம் வைகுண்டராஜனுக்கு ஆதரவாகத் தீர்ப்பளிக்கிறார். ஆகஸ்டு மாதம் மதுரைக்கு வந்த இந்த நீதிபதிக்கு மீண்டும் கனிம வளத்துறையே ஒதுக்கப்படுகிறது. வைகுண்டராஜனின் கனிம வளக் கொள்ளை தொடர்பாக பேடி குழு அளித்த பரிந்துரையை அப்படியே நிராகரித்து, வினோத் குமார் சர்மா என்ற தமிழே தெரியாத பஞ்சாப் மாநில ஓய்வு பெற்ற நீதிபதி விசாரணை அதிகாரியாக நியமிக்கப்படுகிறார். 9 மாதங்களாக கனிமவளத்துறை என்ற ஒரு துறையை ஒரு குறிப்பிட்ட நீதிபதிக்கு மட்டுமே ஒதுக்கித் தந்திருப்பவர், சட்டத்தின் ஆட்சி பற்றி பெரிதும் கவலைப்படும் தலைமை நீதிபதிதான் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

கடந்த 20 ஆண்டுகளாக வைகுண்டராஜனுக்கு வழக்கறிஞராக இருந்த சோமையாஜி, இன்று அரசின் தலைமை வழக்கறிஞராகி விட்டார். ஜெயலலிதாவின் வருமானவரி வழக்கில் அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்த நீதிபதி தட்சிணாமூர்த்திக்கும், விசுவாச உளவுத்துறை அதிகாரி ராமானுஜத்துக்கும் விதிகளை மீறி தகவல் ஆணையர் பதவி வழங்கப்படுகிறது. பாட்டில்கள் நொறுங்கும் சத்தம் கேட்டவுடன், சட்டத்தின் ஆட்சியே நொறுங்கி விட்டதாகத் துடித்துப்போகும் உயர் நீதிமன்றம், இவற்றுக்கெல்லாம் மவுனம் காக்கிறது.

•••

**உ**யர் நீதிமன்றத்தின் 'ஊழல் நீதிபதிகள்' என்று அறியப்படுவோர், கனிமவளக் கொள்ளையர்கள், ரியல் எஸ்டேட் முதலைகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடம் தங்களது தீர்ப்பை விலை பேசி விற்கிறார்கள். 'நேர்மையான நீதிபதிகள்' என்று கூறிக் கொள்பவர்களோ, சதாசிவத்தையும், சம்பத்தையும் போலத் தங்களையே நல்ல விலைக்கு விற்றுக்கொள்ள போயஸ் தோட்டத்திடம் தவமிருக்கிறார்கள்.

ஒரு கீழ்நிலை அதிகாரி லஞ்சம் வாங்கும்போது அது அந்தத் தனி நபரின் குற்றமாக முடிந்து விடுகிறது. ஆனால், ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி லஞ்சம் வாங்கிக் கொண்டு கனிமவளக் கொள்ளையை நியாயப்படுத்தி தீர்ப்பெழுதும்போது, குற்றத்துக்கு சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டு விடுகிறது. அந்தத் தீர்ப்பைக் காட்டி சட்டபூர்வமாகவே கொள்ளையிடும் வாய்ப்பு எல்லோருக்கும் திறந்து விடப்படுகிறது.

ஏற்கெனவே, போராடும் மக்கள் மீது கொலை முயற்சி உள்ளிட்ட பொய் வழக்குகளைப் போட்டு சிறைக்கு அனுப்புகிறது போலீசு. குற்றப் பத்திரிகையே தாக்கல் செய்யாமல், விசாரணைக் கைதியாக சிறை வைத்தே தண்டனை வழங்கும் போலீசின் இந்தச் சதிக்கு உடந்தையாக இருந்து வரும் நீதிமன்றம், இப்போது மக்களை ஒடுக்குவதற்கு போலீசுக்கு வழி சொல்லிக் கொடுக்கிறது. நீதிபதி வைத்தியநாதனின் தீர்ப்பு விசாரணையே இல்லாமல் தண்டனை விதிக்கும் ‘‘அட்வான்ஸ் அபராதம்’’ என்ற கொலைக்கருவியை போலீசின் கையில் கொடுத்திருக்கிறது.

மொத்தத்தில் ஜெ. அரசுக்கு எதிராகப் பேசுபவர்களை ஒடுக்குகின்ற போலீசு அவுட்போஸ்ட்டாகவே மாறிக் கொண்டிருக்கிறது உயர் நீதிமன்றம். நாம் பெரிதும் கவலை கொள்ள வேண்டிய அசாதாரணமான சூழல் இது.

குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் காவலன் என்று கூறிக்கொள்ளும் உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகள், தங்கள் சொந்த ஆதாயத்துக்காக தமிழ் மண்ணையும் தமிழ் மக்களின் உரிமைகளையும் சூறையாடுவதுடன், வழக்குரைஞர் தொழிலுக்குரிய மாண்பையும் சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

நீதிபதிகள் நம் மீது திணிக்கும் இந்த அவமதிப்பை நாம் சகித்துக் கொள்ளப் போகிறோமா?

–மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு.

## தீஸ்தா செதல்வாட் கைது முயற்சி:

# பாசிச மோடியின் பழிதீர்க்கும் வெறி!

‘‘தேசத் துரோகி’’ என்று மோடி அரசால் பொய்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரபல மனித உரிமைச் செயற்பாட்டாளரான தீஸ்தா செதல்வாட், அவரைக் கைது செய்து சிறையிடத் துடிக்கும் மோடி கும்பலின் சதிகளிலிருந்து தற்காலிமாக மீண்டுள்ளார்.

தீஸ்தாவினுடைய சப்ரங் கம்யூனிகேஷன்ஸ், நீதி மற்றும் அமைதிக்கான குடிமக்கள் ஆகிய தன்னார்வ நிறுவனங்கள் 2004-லிருந்து 2006 வரையிலான காலத்தில் உள்துறை அமைச்சகத்தின் ஒப்புதல் இல்லாமல் போர்டு பவுண்டேசனிடமிருந்து முறைகேடாக அந்நிய நிதியைப் பெற்றுள்ளதாகவும், அந்நிய நன்கொடை முறைப்படுத்துதல் சட்டத்திற்கு (FCRA) எதிராகச் செயல்பட்டதாகவும், கிரிமினல் சதிகளில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டி கடந்த ஜூலை 8 அன்று மோடி அரசின் கூண்டுக்கிளியான மையப் புலனாய்வுத்துறை தீஸ்தா மீது வழக்கு தொடுத்தது.

ஒப்பந்த அடிப்படையில் அயல் பணிகளுக்கான கட்டணமாகவே இந்த நன்கொடையைப் பெற்றுள்ளதாகவும், இதில் சட்ட விரோதமான எந்தத் தவறும் நடக்கவில்லை என்றும், இதன் கணக்கு விவரங்கள் முறைப்படி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தீஸ்தாவும் அவரது வழக்குரைஞர்களும் விளக்க அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர். இருப்பினும், குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்யாமலேயே தீஸ்தாவைக் கைது செய்து, அவரது செயல்பாட்டை முடக்கத் துடித்தது மோடி அரசால் ஏவிவிடப்பட்ட சி.பி.ஐ.


கடந்த ஜூலை 14 அன்று தீஸ்தாவின் வீடு மற்றும் அலுவலகங்களில் சோதனை நடத்தி, அந்நிய நன்கொடையைக் கொண்டு ‘‘ஜோதா அக்பர்’’, ‘‘பா’’ முதலான சினிமா பட சி-டிக்களை தீஸ்தா வாங்கியுள்ளதாகவும், முடி அலங்காரத்துக்கும், மூக்குக் கண்ணாடிக்கும் செலவிட்டுள்ளதாகவும், காது குடையும் தும்பு, நகவெட்டி, கொண்டை ஊசி வாங்கியுள்ளார் என்றெல்லாம் அற்ப விவகாரங்களை ஊதிப்பெருக்கி, ஏதோ நிதி மோசடியைக் கண்டுபிடித்துவிட்டதைப் போல அறிக்கை தயாரித்து அவரைக் கைது செய்ய சி.பி.ஐ. முயற்சித்தது. அது அம்பலப்பட்டுப் போனதால், தேசப் பாதுகாப்புக்கு தீஸ்தா அச்சுறுத்தலாக உள்ளார் என்றும், தீஸ்தாவின் சப்ரங்

மோடி அரசால் ‘தேசத்துரோகி’எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பிரபல மனித உரிமைச்செயற்பாட்டாளர் தீஸ்தா செதல்வாட்.



கம்யூனிகேஷன் என்ற தன்னார்வ அமைப்பானது மதவெறியைக் கிளறி விடுவதாகவும், அந்நிய நிதியைக் கொண்டு இந்தியப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க முயற்சிப்பதாகவும் பொய்க் குற்றம் சாட்டி அவரைக் கைது செய்ய சி.பி.ஐ. துடித்தது.

இந்நிலையில் தீஸ்தா, தனக்கு முன் ஜாமீன் வழங்கக் கோரி மனு தாக்கல் செய்தார். ஜூலை 24 அன்று சி.பி.ஐ. நீதிமன்றம் தீஸ்தாவின் முன்ஜாமீன் மனுவை ரத்து செய்தது. அதை எதிர்த்து தீஸ்தா மும்பை உயர் நீதிமன்றத்தில் முறையிட்ட பின்னர், கடந்த ஆகஸ்டு 11 அன்று ''தீஸ்தா, இந்தியாவின் இறையாண்மைக்கு எதிரானவர், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துபவர்'' என்று வாதிட்ட சி.பி.ஐ.யின் குற்றச்சாட்டுகளை மறுத்து மும்பை உயர் நீதிமன்றம் தீஸ்தாவுக்கு முன்ஜாமீன் வழங்கியுள்ளது.



இந்துவெறியாட்டத்துக்குத் துணையாக அரசு எந்திரத்தை ஏவிய மோடியின் உத்தரவுக்கு எதிராக நின்ற குற்றத்துக்காக, தற்போது மோடி அரசால் நிரந்தரமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள போலீசு உயரதிகாரி சஞ்சீவ் பட்.

2002-ஆம் ஆண்டில் குஜராத்தில் நடந்த பெஸ்ட் பேக்கரி இந்துவெறி கொலைவெறியாட்ட வழக்கில் முக்கிய சாட்சியான ஜாகிரா ஷேக் என்ற இளம் பெண்ணை மிரட்டி தீஸ்தாவுக்கு எதிராகப் புகார் கொடுக்க வைத்தது அன்று குஜராத் முதல்வராக இருந்த மோடி கும்பல். அரசு அதிகார பலத்தோடு இந்துவெறி பாசிசம் கோலோச்சும் மாநிலத்தில், இதனைச் சட்ட ரீதியாக முறியடித்ததோடு, இந்துவெறி பயங்கரவாதக் குற்றவாளிகளுக்கு எதிரான தீர்ப்பையும் பெற்றுத் தந்தார் தீஸ்தா. இந்துவெறி பாசிச மோடி கும்பலுக்கு எதிராக நீதிமன்றத்தில் விடாப்பிடியான சட்டப் போராட்டத்தை நடத்துவதென்பது சாதாரண விசயமல்ல. குஜராத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான பயங்கரவாத வெறியாட்டத்தை நடத்திய இந்துவெறியர்கள் 117 பேர் குற்றவாளிகள் என்று நீதித்துறையால் தண்டிக்கப்பட்டுள்ளதிலும், நரோடா பாட்டியா எனுமிடத்தில் நடந்த முஸ்லிம் படுகொலை வழக்கில் குஜராத்தின் அன்றைய மோடி ஆட்சியில் அமைச்சராக இருந்த மாயா கோத்னானிக்கு 26 ஆண்டுகால சிறைத் தண்டனை அளிக்கப்பட்டதிலும் தீஸ்தாவின் பங்கும் அவரது கடும் உழைப்பும் முக்கியமானவை.

இந்துவெறி பயங்கரவாதிகளுக்குச் சட்டப்படி தண்டனை அளித்த குற்றத்துக்காக, மோடிஆட்சியில் கொலை மிரட்டலுக்கு ஆளாகியுள்ள குஜராத்தின் சிறப்பு நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜோட்சனா யாக்னிக்.



2002 குஜராத் படுகொலைகளின் போது குல்பர்க் சொசைட்டி குடியிருப்பு வளாகத்தில் முஸ்லிம்களுக்கு அடைக்கலம் கொடுத்த முன்னாள் காங்கிரசு எம்.பி. இஷான் ஜாப்ரியோடு பலரையும் உயிரோடு கொளுத்திக் கொன்ற இந்துவெறி பயங்கரவாதிகளுக்கு எதிரான வழக்கைத் தொடர்ந்து நடத்தியவர்தான் தீஸ்தா செதல்வாட். அதனாலேயே குல்பர்க் சொசைட்டி வளாகத்தில் தீஸ்தாவும் அவரது கணவர் ஜாவீத் ஆனந்தும் ஒரு நினைவுச் சின்னம் அமைக்க நன்கொடை வசூலித்து கையாடல் செய்ததாகப் பொய்வழக்கு போட்டு அச்சுறுத்தியது மோடி கும்பல். கடந்த ஜூலை 27 அன்று இஷான் ஜாப்ரியின் துணைவியாரான ஜாகியா ஜாப்ரியின் மேல்முறையீடு வழக்கு விசாரணைக்கு வருவதால், அதில் சாட்சியங்களை முன்வைத்து தீஸ்தா வாதிட முடியாதபடி முடக்கவும், அச்சுறுத்திப் பணிய வைக்கவும் இப்போது புதியதொரு பொய் வழக்கைச் சோடித்து அவரைத் 'தேசத் துரோகி'யாகச் சித்தரித்து கைது செய்து சிறையிட மோடி அரசு கீழ்த்தரமாக முயற்சித்தது.

தீஸ்தா மட்டுமல்ல, இந்துவெறி பாசிச மோடி கும்பலுக்கு எதிராக நிற்கும் பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து பழிவாங்கப்பட்டு வருகின்றனர். குஜராத்தில் நடந்த சோராபுதீன் ஷேக் போலி மோதல் கொலை வழக்கில் அன்றைய மோடியின் குஜராத் அரசை குற்றவாளிக் கூண்டில் ஏற்றியதில், உச்ச நீதிமன்றத்தின் நீதிமன்ற நண்பராகவும் முன்னாள் அரசு தலைமை வழக்குரைஞராகச் செயல்பட்டவருமான கோபால் சுப்பிரமணியத்தின் பங்கு முக்கியமானது. அவ்வழக்கில் குஜராத் அரசின் சட்டவிரோத நடவடிக்கைகள் அம்பலப்படுத்தப்பட்டு உச்ச நீதிமன்றத்தால் கண்டிக்கப்பட்டது. இதனாலேயே பிரதமராகியுள்ள மோடியின் அரசு கோபால் சுப்பிரமணியத்தை உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிப்பதற்கு வன்மத்துடன் எதிர்ப்பு தெரிவித்தது.

குஜராத்தில் 2002-இல் கோத்ரா ரயில் தீ விபத்துக்குப் பிறகு நடந்த இந்துவெறி பயங்கரவாதப் படுகொலைகளின் போது மாநில முதல்வராக இருந்த மோடி, ''இந்துக்களின் கோபம் அடங்கும்வரை கண்டுகொள்ள வேண்டாம்'' என்று உயர் போலீசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதை உச்ச நீதிமன்றம் அமைத்த சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் அம்மாநில போலீசு உயரதிகாரியாகப் பணியாற்றிய சஞ்சீவ் பட் சாட்சியமளித்தார். ஆனால், அச்சிறப்புப் புலனாய்வுக் குழுவோ மோடிக்கு ஆதரவாகச் செயல்பட்டதால், தனது சாட்சியத்தை அவர் உச்ச நீதிமன்றத்தில் பிரமாண வாக்குமூலமாகத் தாக்கல் செய்தார். அதனாலேயே 2011-இல் குஜராத்தில் முதல்வராக இருந்த மோடி அரசினால் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு கைது செய்யப்பட்டார்.

பிரதமராகியுள்ள மோடியின் அரசால் இப்போது அவர் பணியிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டு பழிவாங்கப் பட்டுளார்.

இதுமட்டுமல்ல, 2002-இல் குஜராத்தின் நரோடா பாட்டியாவில் நடந்த இந்துவெறி பயங்கரவாதப் படு கொலையில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் மாயா கோட்னானி, பாபு பஜ்ராங்கி உள் ளிட்ட 32 பேருக்குத் தண்டனை அளித்த குஜராத்தின் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜோட்சனா யாக்னிக் -க்கு மோடி ஆட்சியில் 22 முறை கொலை மிரட்டல்கள் வந் துள்ளன. அகமதாபாத் நகர கீழமை நீதிமன்ற நீதிபதி யாக இருந்த ஹிமான்ஷு திரிவேதி, மோடியின் இந்துத் துவத் திட்டங்களுக்கு உடன்பட மறுத்து 2003-இல் பதவி விலகினார். தற்போது நியூஜிலாந்தில் வசிக்கும் அவர், 2002 குஜராத் இந்துவெறி பயங்கரவாதப் படு கொலைகளுக்குப் பின்னர் குஜராத்தின் அன்றைய மோடி அரசு எங்களை முஸ்லிம்களுக்கு எதிராக நிற்க வேண்டுமென பலவழிகளிலும் அச்சுறுத்திய தாலேயே நான் பதவி விலகினேன் என் கிறார்.

தனது இந்துத்துவ - மறுகாலனி யாதிக்கத் திட்டத்திற்கு எதிராக உள்ளவர் களை ஒடுக்குவதற்காக கீழ்த்தரமாக ஒரு காரணத்தைக் கண்டுபிடிக்கும் மோடி கும்பல், அதை வைத்து பொய்வழக்கு சோடித்து அச்சுறுத்துவதை வாடிக்கை யாகக் கொண்டுள்ளது. இப்படித்தான் அணுஉலைத் திட்ட எதிர்ப்பாளரும் சமூக அரசியல் விமர்சகருமான காலஞ் சென்ற பிரபுல் பித்வாய், நர்மதா பாது காப்பு இயக்கத்தின் தலைவர் மேதா பட்கர் முதலானோரும் 'இந்தியாவின் வளர்ச்சிக்கு எதிரான அந்நிய சதிகாரர்' களாக மோடி அரசால் குற்றம் சாட்டப் பட்டனர். இன்டால்கோ மற்றும் எஸ்ஸார் ஆகிய கார்ப்பரேட் நிறுவனங்கள் ம.பி.யில் பழங்குடி மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து வெளி யேற்றுவதை அம்பலப்படுத்தி, இங்கிலாந்து நாடாளு மன்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உரையாற்ற இலண்டனுக்குப் புறப்பட்ட கிரின்பீஸ் எனும் சுற்றுச் சூழல் தன்னார்வ நிறுவனத்தின் பிரச்சாரகரான பிரியா பிள்ளையை, இதனாலேயே தேடப்படும் குற்றவாளி யாக அறிவித்து அவர் மீது பொய்வழக்கு போட்டு அவரை வெளிநாடுகளுக்குச் செல்லத் தடைவிதித்து முடக்கியது மோடி கும்பல்.

இந்துத்துவ - மறுகாலனியாதிக்கத் திட்டத்திற்கு எதிராக நிற்பவர்கள், மோடியின் சதிகளுக்கு உடன் படாத பதவியிலுள்ள அதிகாரிகள், நீதிபதிகள்; குஜராத் இந்துவெறி படுகொலைகளை தொடர்ந்து அம்பலப் படுத்தும் மனித உரிமை அமைப்புகள்; சுரங்கங்கள், அணைக்கட்டுகள், அணு மின் திட்டங்கள், மரபணு மாற்றப் பயிர்கள் முதலான 'வளர்ச்சி'த் திட்டங்களை எதிர்க்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தன்னார்வக் குழு வினர் முதலானோர் மோடியின் பார்வையில் தேச விரோத சக்திகளாவர்.

மறுபுறம், மோடி - அமித்ஷா குற்றக்கும்பல் ஆட்சிக்கு வந்ததும் இந்துவெறி பயங்கரவாதக் குற்ற வாளிகள் எவ்வித எதிர்ப்புமில்லாமல் ஒவ்வொருவ ராக விடுதலையாவதும், சலுகைகளோடு அதிகாரத் தில் அமர்த்தப்படுவதும் வேகமாக அரங்கேறி வரு கிறது. முன்னாள் காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பின ரான இஷான் ஜாப்ரி இந்துவெறியர்களால் கொல்லப் பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கிரைம் பிரான்ச் கமிஷனரான ஏ.கே. சர்மா இன்று சி.பி.ஐ.யில் முக்கிய பொறுப்பில் மோடி அரசால் அமர்த்தப்பட்டுள்ளார். குஜராத் போலி மோதல் படுகொலைகளுக்கு மூளை யாகச் செயல்பட்ட அரசு பயங்கரவாத போலீசு அதிகாரி யான டி.ஜி. வன்சாராவும், நரோடா பாட்டியா வழக் கில் 26 ஆண்டுகால ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட குஜராத் முன்னாள் அமைச்சர் மாயா கோத்னானியும் இப்போது நீதித்துறையால் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர்.



தீஸ்தா மீது பொய்வழக்கு போடப்பட்டிருப்பதைக் கண்டித்து மும்பையிலுள்ள சி.பி.ஐ. அலுவலம் எதிரே நடந்த ஆர்ப்பாட்டம்.

மோடி ஆட்சியில் இந்துவெறி பாசிசம் புதிய பாய்ச் சலுடன் முன்னேறித் தாக்கி வருகிறது. மோடி கும் பலை அம்பலப்படுத்தி முடக்குவதற்கான வாய்ப்பாக இந்த விவகாரங்கள் உள்ள போதிலும், எதிர்க்கட்சிகள் போராடுவதில்லை. மதச்சார்பின்மை பேசும் கட்சிகள் இதற்கு எதிராக வாய் திறப்பதுமில்லை. பார்ப்பன பாசி சத்துக்கு எதிராக உயிரைப் பணயம் வைத்துப் போராடும் தீஸ்தா போன்றோர் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள். சட்டரீதியான போராட்டங்களுக் கான வாய்ப்புகள் மோடியின் ஆட்சியில் அருகிவிட்ட நிலையில், புரட்சிகர ஜனநாயக சக்திகளின் தலைமை யில் அமைப்பு ரீதியிலான மக்கள்திரள் இயக்கங்களும் போராட்டங்களும் மட்டுமே இந்துவெறி பாசிச பயங் கரத்தை வீழ்த்துவதற்கான ஒரேவழியாக நம்முன்னே காத்திருக்கிறது.

● பாலன்

## என்.எல்.சி. தொழிலாளர் போராட்டம்:

# பின்னடைவு உணர்த்தும் உண்மைகள்

நிரந்தரத் தொழிலாளி, ஒப்பந்த தொழிலாளி என சுரங்கத் தொழிலாளிகள் இருவேறு சங்கங்களாகப் பிரிந்து கிடப்பதை ஒன்றுபடுத்த தவறியது பின்னடைவுக்கான முக்கிய காரணமாகும்.

அரசுத்துறை நிறுவனமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் (என்.எல்.சி.) ஊதிய உயர்வை நடைமுறைப்படுத்தக் கோரி 39 நாட்களாக நடைபெற்று வந்த தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் திரும்பப் பெறப்பட்டு பின்னடைவைச் சந்தித்துள்ளது. ஊதிய உயர்வுக் கோரிக்கை நிர்வாகத்தால் ஏற்கப்படாத நிலையில், ஆகஸ்ட் 27 இரவு முதலாகத் தொழிலாளர்கள் மீண்டும் பணிக்குத் திரும்பியுள்ளனர்.

என்.எல்.சி.யில் 12 ஆயிரம் நிரந்தரத் தொழிலாளர்களும், 10 ஆயிரம் ஒப்பந்த - தற்காலிகத் தொழிலாளர்களும் பணியாற்றுகின்றனர். நிரந்தரத் தொழிலாளர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும். 2011 டிசம்பர் 31-ஆம் தேதியுடன் முந்தைய ஒப்பந்தம் முடிவடைந்துள்ள நிலையில், கடந்த 43 மாதங்களாக புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்து நிர்வாகம் அடாவடி செய்து வந்தது. ஆண்டுக்கு ரூ.1500 கோடி இலாப மீட்டியுள்ள போதிலும், தொழிலாளர்கள் கோரும் 24 சதவீத ஊதிய உயர்வை ஏற்க மறுக்கும் நிர்வாகம், 10 சதவீத அளவுக்கே தரமுடியும் என்று பிடிவாதமாக நின்றது. ஊதிய உயர்வுக்காக 30 முறை பேச்சுவார்த்தைகள் நடந்துள்ள போதிலும், நிர்வாகம் சற்றும் இறங்கிவராத நிலையில்தான் புதிய ஊதிய ஒப்பந்தம், தொழிலாளர்கள் பெற்றுவந்த அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுவது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்தன.

இவ்வேலை நிறுத்தத்துக்குத் தடைவிதிக்கக் கோரி என்.எல்.சி.யின் மண்டலத்தலைமை மேலாளர் தாக்கல் செய்த மனுவை ஏற்று, சென்னை உயர் நீதிமன்றம் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்துக்குத் தடை விதித்தது. இத்தடையை மீறித்தான் கடந்த ஜூலை 20-ஆம் தேதி முதலாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆனாலும் நிர்வாகம் அசைந்து கொடுக்கவில்லை. மாறாக, வேலை நிறுத்தத் தடையுத்தரவை மீறியதாகத் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுத்துள்ளதுடன், அத்தலைவர்களை ஏன் வேலை நீக்கம் செய்யக் கூடாது என்று காரண அறிக்கையும் கொடுத்து அச்சுறுத்தியது. தொ.மு.ச. தொழிற்சங்கத் தலைவர் திருமாவளவனைப் பணி நீக்கம் செய்திருப்பதோடு, மற்ற தொழிற்சங்க நிர்வாகிகளை ‘‘ஏன் உங்களை வேலை நீக்கம் செய்யக் கூடாது’’ என்று விளக்க நோட்டீசு கொடுத்து அச்சுறுத்தி பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

நல்ல இலாபமீட்டும் பொதுத்துறை நிறுவனங்களுள் ஒன்றாக இருந்தபோதிலும், ஊதிய உயர்வைக் கொடுக்க மறுத்து என்.எல்.சி. நிர்வாகம் திமிர்த்தனமாக நடந்து கொண்டு பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடக் காரணமென்ன? ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஒன்றிணைந்து ஒரு மாதத்துக்கும் மேலாக வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம், நிர்வாக அலுவலக முற்றுகை, ரயில் மறியல், உண்ணாவிரதம் - எனப் பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை நடத்திய போதிலும் இப்போராட்டம் தோல்வியடையக் காரணம்தான் என்ன?

நிர்வாகத்தின் திமிர்த்தனத்தையும், வேலைநிறுத்தத்துக்குத் தடைவிதித்த நீதித்துறையின் சர்வாதிகாரத்தையும் கண்டு தொழிலாளி வர்க்கம் அச்சப்படவோ, போராட்டம் தோல்வியில் முடிந்துள்ளதைக் கண்டு அவநம்பிக்கை கொள்ளவோ கூடாது. இது தோல்விதான் எனினும், போராட்டத்தில் தோல்வி ஏற்படுவது தவறல்ல. ஆனால், ஏன் தோல்வி ஏற்பட்டது என்று பரிசீலிக்காமல் இருப்பதுதான் தவறு.

இதற்கு முன்பு, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி தங்களைப் பணி நிரந்தரம் செய்யக்கோரி கடந்த 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து அற்பக் கூலிக்கு உழைத்துவரும் என்.எல்.சி.ஒப்பந்தத் தொழிலாளர்கள் 2008-இலும், அதன் பின்னர் 2014-இலும் போராடிய போதிலும் நிர்வாகம் அசைந்து கொடுக்கவில்லை. மைய அரசோ, உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளைத் தொடர்ந்து உதாசீனப்படுத்து

கிறது. என்.எல்.சி.யில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நடைமுறைப்படுத்த மறுக்கும் என்.எல்.சி. நிறுவனத்தின் மீதும், அதன் இயக்குனர்கள் மீதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க நீதித்துறை மறுக்கிறது. அதேசமயம், தற்போது நிரந்தரத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உடனே தடைவிதிக்கிறது.

நீதித்துறையானது தொழிலாளர்களின் உரிமைகளையும் மக்களின் உரிமைகளையும் பறிக்கும் ஒடுக்குமுறை நிறுவனமாகவே மாறி நிற்கிறது. ஓய்வு பெற்ற நீதிபதி சந்துருவே, உயர் நீதிமன்றம் தலையிட்டு வேலை நிறுத்தத்தைத் தடைசெய்வதை சட்டப்படி தவறு என்று கூறுகிறார். ஆனாலும், தொழிலாளர்களின் உரிமையைப் பறிக்கும் நீதித்துறையின் சர்வாதிகாரத்துக்கு எதிராக என்.எல்.சி. தொழிலாளர்கள் கிளர்ந்தெழுந்து போராடவில்லை. தொழிலாளர்கள் வேலை நிறுத்த அறிவிப்பை முன்கூட்டியே அறிவித்து சட்டபூர்வ வழியில் போராடினாலும், நீதித்துறையும் அரசும் நிர்வாகமும் அதனைக் கடுகளவும் மதிப்பதில்லை. அரசும் நிர்வாகமும் நீதித்துறையும் தாங்கள் போட்ட சட்டத்தை தாங்களே மதிக்காத நிலையில், என்.எல்.சி. தொழிலாளர்கள் சட்டவரம்புகளை மீறிப் போராடவும் முன்வரவில்லை.

நெய்வேலியில் ஊதிய உயர்வு கோரி நிரந்தரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போதிலும், பெருமளவு பாதிப்போ தடையோ இல்லாமல் மின் உற்பத்தி வழக்கம் போலவே தொடர்ந்து கொண்டிருந்தது. ஒப்பந்த - தற்காலிகத் தொழிலாளர்களைக் கொண்டு மின் உற்பத்தி தடைபடாமல் அனல் மின்நிலையத்தை நிர்வாகம் இயக்கியது. நிரந்தரத் தொழிலாளர்கள் போராடினாலும், ஒப்பந்த - தற்காலிகத் தொழிலாளர்களைக் கொண்டு உற்பத்தியைத் தொடர முடியும் என்ற நம்பிக்கை நிர்வாகத்துக்கு இருக்கிறது. அதனால்தான் நிரந்தரத் தொழிலாளர்கள் ஓரணியில் திரண்டு போராடிய போதிலும், கடுகளவும் அசைந்துகொடுக்க மறுத்ததோடு, தொழிற்சங்க முன்னணியாளர்களைப் பழிவாங்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டது.

போராடிய நிரந்தரத் தொழிலாளர்கள், தற்காலிக - ஒப்பந்தத் தொழிலாளர்களுடன் இணைந்து கூட்டு வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தவில்லை. அவ்வாறு ஒன்றிணைந்து போராடியிருந்தால், நெய்வேலியில் மின் உற்பத்தியை முற்றாக முடக்கி, நிர்வாகத்தை நிலைகுலைய வைத்து பணிய வைத்திருக்க முடியும் . ஆனால், இதற்கு நிரந்தரத் தொழிலாளர்களும் அவர்களது தொழிற்சங்கங்களும் தயாராக இல்லை. இதனால்தான் என்.எல்.சி. நிரந்தரத் தொழிலாளர்களின் போராட்டத்தைக் கண்டு நிர்வாகம் அஞ்சவில்லை. நிரந்தரத் தொழிலாளியை வேலை நீக்கம் செய்து வீட்டுக்கு அனுப்பினால்கூட நிர்வாகத்தை ஒன்றும் செய்ய முடியாத அவமானகரமான நிலைமைதான் உள்ளது.

நிரந்தரத் தொழிலாளர்கள் கூடுதல் சம்பளம் பெறுவதற்கும், அதிகாரிகள் ஒரு லட்ச ரூபாய் அளவுக்கு சம்பளத்துடன் கொழுப்பதற்கும், என்.எல்.சி. யின் லாபம் பெருகியதற்கும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் தான் முக்கிய காரணமாக உள்ளனர். ஆனால், ஒப்பந்தத் தொழிலாளர் போராடினால் நிரந்தரத் தொழிலாளர்கள் ஆதரவாக நிற்பதில்லை. நிரந்தரத் தொழிலாளர்களுக்கென ஒரு சங்கமும், தற்காலிக - ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கென ஒரு சங்கமுமாக தொழிற்சங்கத் துரோகிகள் தொழிலாளர்களைப் பிரித்து வைத்துதான் இயக்குகின்றனர். நெய்வேலி மட்டுமல்ல; இதர அரசுத்துறை, தனியார் துறைகளிலும் இப்படித்தான் நடக்கிறது.



அனல் மின் நிலையத்தை முற்றுகையிட ஊர்வலமாகச் செல்லும் என்.எல்.சி. தொழிலாளர்கள்.

இதனால் நிரந்தரத் தொழிலாளர்கள் போராடினால், தற்காலிக - ஒப்பந்தத் தொழிலாளர்களை வைத்து உற்பத்தியைத் தொடர்வதும், போராடும் நிரந்தரத் தொழிலாளர்களைப் பழிவாங்குவதும் தொடர்கிறது. நிரந்தரத் தொழிலாளியும் தற்காலிக ஒப்பந்தத் தொழிலாளியும் ஐக்கியப்பட்டு போராடாவிடில் ஒட்டுமொத்த தொழிலாளி வர்க்கத்துக்கே அழிவுதான். இதனைப் படிப்பினையாகக் கொண்டு நிரந்தரத் தொழிலாளர்களும் தற்காலிக - ஒப்பந்தத் தொழிலாளர்களும் ஒன்றிணைந்து போராடினால்தான் உற்பத்தியை முடக்கி நிர்வாகத்தை பணிய வைக்க முடியும். தொழிலாளி வர்க்க ஒற்றுமையைக் கட்டிவளர்த்து போராடுவதற்கான பாதை விரிந்து கிடக்கிறது. பயணத்தைத்தான் தொழிலாளி வர்க்கம் தொடங்க வேண்டியிருக்கிறது.

● மனோகரன்

# அரசுப் பள்ளியில் புகும் ஆர்.எஸ்.எஸ். ஆமை!

**செ**ங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்கு கடந்த ஜூலை மாதம் 23, 24 தேதிகளில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் பிள்ளையார் சுழியின் முக்கியத்துவம் குறித்து போதிக்கப்பட்டிருக்கிறது. ''கடவுள் துகளையே'' கண்டுபிடிக்கும் அளவிற்கு அறிவியல் வளர்ந்துவிட்ட நிலையில் பிள்ளையார் சுழியின் முக்கியத்துவம் குறித்து வகுப்பா? என இதைப் படிக்கும் வாசகர்களுக்குத் தலையில் அடித்துக்கொள்ளத் தோன்றலாம். ஆனால், இந்த விசயம் இப்படி சலித்துக் கொண்டு ஒதுக்கிவிடக்கூடிய அளவிற்கு சாதாரணமானது அல்ல. ஏனெனில், ''அது, பயிற்சி வகுப்பு என்ற போர்வையில் நடத்தப்பட்ட ஆர்.எஸ்.எஸ்.ஷாகா'' என்பதையும் ''பள்ளிக்கல்வித் துறையே உத்தரவு போட்டு அரசுப்பள்ளி ஆசிரியர்களை அனுப்பி வைத்திருப்பதையும்'' அவ்வகுப்பில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் நக்கீரன் இதழ் (ஆக.08-11, பக்.10) வழியாக அம்பலப்படுத்தியுள்ளனர்.

சென்னையிலுள்ள பார்ப்பன சேரியான மயிலாப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள அறம் மற்றும் பண்பாட்டு முனைவு மையம் என்ற அமைப்புதான் இப்பயிற்சி வகுப்பை ஒழுங்கு செய்து நடத்தியிருக்கிறது. இந்த அமைப்பு ஆர்.எஸ்.எஸ்.-இன் விஷக் கொடுக்குகளுள் ஒன்று. தயானந்த சரசுவதி, ஆடிட்டர் குருமூர்த்தி, பத்மா சுப்பிரமணியன், திருமதி ஒய்.ஜி.பார்த்தசாரதி உள்ளிட்ட ஆர்.எஸ்.எஸ்-க்கு நெருக்கமான தமிழகத்துப் பார்ப்பன கும்பல்தான் அவ்வமைப்பிற்குத் தலைமையேற்றுள்ளது. இந்த விவரங்களெல்லாம் பார்ப்பன ஜெயா அரசுக்கும் தமிழகப் பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகளுக்கும் தெரியாத விடயமல்ல. ஆசிரியர் பயிற்சி வகுப்பு என்ற பெயரில் அங்கு பார்ப்பன மூடக் கருத்துகளும், ஆர்.எஸ்.எஸ்.இன் அரசியலும்தான் ஆசிரியர்களின் மூளையில் திணிக்கப்படும் எனத் தெரிந்தேதான், பள்ளிக்கல்வித் துறை ஒவ்வொரு அரசுப் பள்ளியும் தலா ஒரு ஆசிரியரை அப்பயிற்சி வகுப்புக்கு அனுப்பி வைக்க வேண்டும் என உத்தரவிட்டிருக்கிறது. எனில், ஜெயா அரசு-ஆர்.எஸ்.எஸ்-க்கு இடையே உள்ள இந்தக் கூட்டின் உள்நோக்கமென்ன என்ற கேள்வி முக்கியமானது.

இன்று இரண்டு அபாயங்கள் தமிழக பள்ளிக் கல்வியைக் கவ்வக் காத்திருக்கின்றன. ஒன்று, மொழிப் பாடத்திட்டத்தில் மீண்டும் இந்தியைத் திணிப்பதற்கு கமுக்கமாக நடைபெற்றுவரும் முயற்சிகள்; மற்றொன்று, அரசுப் பள்ளிகளில் பார்ப்பனப் பண்பாட்டைத் திணிக்கும் முயற்சி. இந்த வகுப்பு அந்த முயற்சிகளின் முன்னறிவிப்பு.

இப்பயிற்சியின் தொடக்கமே ஆர்.எஸ்.எஸ்.இன் 'தேசிய'த் திட்டமான கோமாதாவைக் காப்பதை வலியுறுத்துவதாக அமைந்தது. அதனை நேரடியாகச் சொல்லாமல், ''சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க வேண்டும், வன விலங்குகளைப் பாதுகாக்க வேண்டும்; யானை, பாம்பு, மாடு ஆகிய விலங்குகளைக் கொல்லக் கூடாது'' என ஜீவகாருண்யவாதிகள் போல பேசத் தொடங்கி, ''இதையெல்லாம் புனிதமா மதிக்கணும்'' என முடித்துத் தலையைச் சுற்றி மூக்கைத் தொட்டுள்ளனர்.

இதனையடுத்து, ''துவ்ருக்ஷா வந்தனம், துளசி வந்தனம், பூமி வந்தனம், பித்ரு வந்தனம், சுவாசினி வந்தனம், பாரத் மாதா/பரம் வீர் வந்தனம் என்ற ஆறுவிதமான சமஸ்காரங்களைப் பண்ண வேண்டும்'' எனப் பார்ப்பன சடங்குகளைப் பற்றியும், பிள்ளையார் சுழியின் முக்கியத்துவம் குறித்தும் பிரசங்கம் நடந்திருக்கிறது. ''இந்தியாவோட ஒற்றுமை நமக்கு முக்கியம். அதற்கு இந்து மத கலாச்சாரம்தான் சரியாக இருக்கும்'' என உபதேசம் செய்திருக்கிறார், சனாதன தீவிரவாதி ஆடிட்டர் எஸ்.குருமூர்த்தி.

பயிற்சிக்கு வந்திருந்த ஆசிரியர்களுள் ஒருசாரர் இந்தப் பார்ப்பன கதாகலாட்சேபத்திற்கு அங்கேயே எதிர்ப்பு தெரிவித்ததோடு, ''பசு புனிதமென்றால், ஆடு, கோழி எல்லாம் புனிதமில்லையா?'' என்று திருப்பி அடித்து ஆர்.எஸ்.எஸ். கும்பலின் மூக்கை உடைத்துள்ளனர். மேலும், ''இது என்ன ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சியா, நீங்க என்ன ஆர்.எஸ்.எஸ்.யூனிட்டா?'' எனக் கேட்டு அக்கும்பலின் முகத்திரையைக் கிழித்துள்ளனர். இந்த அயோக்கியத்தனம் பத்திரிகைகளின் வாயிலாக அம்பலப்பட்ட பிறகு, ''இது பற்றி விசாரணை நடத்தப்படும்'' என சால்ஜாப்புகள் நிறைந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறது, பள்ளிக்கல்வித் துறை.

தற்பொழுதுள்ள 10+2+3 என்ற கல்வி முறையையும் பாடத் திட்டத்தையும் முழுமையாக மாற்றி, பள்ளிக் கல்வி மற்றும் பல் கலைக்கழக கல்வியைக் காவிமயமாக்கும் நோக்கில் புதிய கல்விக் கொள்கையை வகுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது, மோடி அரசு. இதற்காக ஆர்.எஸ்.எஸ்.-இன் குட்டிகளுள் ஒன்றான பாரதிய

சிக்ஷா மண்டல் புதிய கல்வித் திட்டத்தை மத்திய அரசிடம் வழங்கியிருப்பதாகவும், அவ்வமைப்பின் தலைமையில் இராசஸ்தான் பல்கலைக்கழகத்தில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

மீண்டும் மும்மொழிக் கொள்கையைக் கொண்டு வருவது இப்புதிய கல்விக் கொள்கையின் ஓர் அம்சமாக உள்ளது. இப்புதிய கல்விக் கொள்கையையும், பாடத் திட்டத்தில் மும்மொழிக் கொள்கையோடு, சமஸ்கிருதத்தையும் பள்ளிக் கல்வியில் சேர்ப்பது தொடர்பாகவும் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது, மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம்.

தமிழகத்தில் பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இயங்கும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திடம் இக்கருத்தரங்களை நடத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, மதுரை, கோவை, சென்னை ஆகிய மூன்று நகரங்களில் கருத்தரங்குகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இக்கருத்தரங்குகளில் 13 தலைப்புகளின் கீழ் கருத்துக் கேட்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும், அதில் 11-ஆவது தலைப்பின் கீழ் மும்மொழிக் கொள்கை மற்றும் சமஸ்கிருதத்தை வளர்ப்பது தொடர்பாக 9 வகையான கேள்விகள் இடம்பெற்றிருப்பதாகக் கல்வியாளர்கள் கூறியிருக்கின்றனர்.

தமிழகத்தில் பத்தாம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயப் மொழிப் பாடமாக பயிற்றுவிக்க வேண்டும் என 2006-இல் சட்டம் கொண்டுவரப்பட்டு, அச்சட்டம் இந்தக் கல்வியாண்டு முதல் கட்டாயமாகிறது. இச்சட்டத்தை எதிர்த்து தொடரப்பட்டுள்ள வழக்குகள் சென்னை உயர்நீதி மன்றத்திலும், அதன் மதுரை கிளையிலும் நிலுவையில் உள்ளன. இச்சட்டத்திற்கு நீதிமன்றம் இடைக்கால தடையேதும் விதிக்கவில்லை என்றபோதும், தமிழகத்திலுள்ள தனியார் பள்ளிகள் - மெட்ரிக் மற்றும் நடுவண் வாரியப் பள்ளிகள் (சி.பி.எஸ்.இ.) இச்சட்டத்தை ஒரு பொருட்டாக மதிப்பதேயில்லை. அப்பள்ளிகளில் தமிழ் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது. குறிப்பாக, நடுவண் வாரியப் பள்ளிகளில் ஒரு வாரத்திற்கு 20 முதல் 40 நிமிடம் மட்டுமே கற்பிக்கப்படும் அளவிற்கு தமிழ் தீண்டத்தகாத மொழியாக ஒதுக்கப்பட்டுவிட்டது.

தமிழகத்திலுள்ள தனியார் பள்ளிகள் தமிழைத் தீண்டத்தகாத மொழியாகப் புறக்கணித்துள்ள நிலையில், அரசுப் பள்ளிகளில் மட்டும்தான் தமிழ் முதன்மைப் பாடமொழியாகவும், பயிற்று மொழியாகவும் இருந்துவருகிறது. அதற்கும் வேட்டு வைக்கும் வகையில் ஒருபுறம் அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழி வகுப்புகளைத் தீவிரமாகத் திணித்துவருகிறது, பார்ப்பன ஜெயா அரசு. இன்னொருபுறம் இந்தியையும் சமஸ்கிருதத்தையும் அரசுப் பள்ளிகளிலும் திணிப்பதற்கான ஏற்பாடுகளில் மோடி அரசோடு கைகோர்த்துச் செயல்படத் துணிந்திருக்கிறது. இவற்றுக்கு அப்பால் அரசுப் பள்ளிகளில் பார்ப்பன பண்பாட்டைத் திணிப்பதற்கும் வழி ஏற்படுத்திக் கொடுத்துவருகிறது, ஜெயா கும்பல்.




கல்லூரிகளில் மட்டுமின்றி, அரசுப் பள்ளிகளில் கூட மாணவர்கள் சாதிரீதியாகப் பிரிந்து மோதிக் கொள்ளும் போக்கு அதிகரித்து வரும் வேளையில்; கல்லூரி மாணவர்களிடேயே போராட்டக் குணம் மழுங்கடிக்கப்பட்டு, சுயநலமும், பிழைப்புவாதமும், சீரழிவும் அதிகரித்துள்ள நிலையில், கல்வித் திட்டத்தில் இந்தி மற்றும் சமஸ்கிருத திணிப்பையும், பார்ப்பன பண்பாட்டுத் திணிப்பையும் வெற்றிகரமாக நிறைவேற்றிவிட முடியும் என மனப்பால் குடிக்கிறது, பார்ப்பனக் கும்பல். 1965-களில் நடந்த மாணவர் போராட்டத்தைப் போன்றதொரு வலிமையான போராட்டத்தை இப்பார்ப்பன சதிக்கு எதிராகத் தமிழக மாணவ சமுதாயம் நடத்தத் துணியாவிட்டால், சுயமரியாதை மரபு கொண்ட தமிழகம் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பலின் அடிமையாக மாற்றப்படுவதைத் தடுத்துவிட முடியாது.

● குப்பன்

## விவசாயிகள் தற்கொலை:

# மோடியின் பொய்யும் புரட்டும்

**புள்ளிவிவர மோசடிகளின் மூலம், காங்கிரசு ஆட்சியைவிடத் தமது ஆட்சியில் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் குறைந்துவிட்டதாகக் கணக்குக் காட்டியிருக்கிறது, மோடி அரசு.**

கர்நாடகத்தில் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் தீவிரமடைந்து கொண்டிருந்த நேரத்தில்தான், மோடி ஆட்சியில் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் குறைந்து வருகின்றன என்று கடந்த ஜூலையில் மத்திய விவசாயத் துறை அமைச்சர் ராதா மோகன் சிங் ஆரவாரமாக அறிவித்துக் கொண்டிருந்தார். விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளுக்கு கடன் சுமையோ, விவசாயப் பிரச்சினைகளோ காரணமல்ல; காதல் விவகாரம், குடும்பப் பிரச்சினைகள், நோய்கள், ஆண்மையின்மை, போதை மருந்து, குடிப்பழக்கம், வரதட்சிணை முதலான தனிப்பட்ட விசயங்கள்தான் காரணம் என்று தேசிய குற்றப்பதிவு ஆணையகத்தின் புள்ளிவிவரங்களை எடுத்துக் காட்டி, வாய்க்கொழுப்பேறி இந்த அமைச்சர் வக்கிரமாகப் பேசியுள்ளார்.

அமைச்சர் ஆதாரமாகக் காட்டும் தேசிய குற்றப்பதிவு ஆணையகத்தின் புள்ளிவிவரங்களின்படி, கடந்த 2013-இல் நாடு தழுவிய அளவில் 11,700 ஆக இருந்த விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள், 2014-ஆம் ஆண்டில் 5,650 ஆகக் குறைந்துள்ளது. அதாவது, மோடி ஆட்சிக்கு வந்தவுடன் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் 50 சதவீத அளவுக்குக் குறைந்துள்ள அதிசயம் நடந்துள்ளது. மகாராஷ்டிராவில் 2013-இல் 3,146 பேராக இருந்த விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள், மோடி ஆட்சிக்கு வந்தபின் 2014-இல் 2,568 பேராகக் குறைந்துள்ளது. 2014-ஆம் ஆண்டில் 12 மாநிலங்களிலும் 6 யூனியன் பிரதேசங்களிலும் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளே இல்லை என்று விவசாய அமைச்சர் கணக்கு காட்டுகிறார். மோடி ஆட்சிக்கு வந்தவுடன் இது எப்படி சாத்தியமாயிற்று?

இது, மோடி கும்பல் கிரிமினல் முறையில் செய்துள்ள அதிநவீன மோசடி. தேசிய குற்றப்பதிவு ஆணையகத்தின் பட்டியலில், விவசாயத்தில் ஈடுபடும் விவசாயி என்று ஒரு பிரிவும், விவசாயம் சார்ந்த பிற துறைகளில் வேலை செய்பவர் என்று ஒரு பிரிவுமாக இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தற்கொலை செய்து கொள்ளும் விவசாயியை ''விவசாயத்தில் ஈடுபடும் விவசாயி'' என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக, அவர் விவசாயியே இல்லை என்றும் ''பிற துறைகளில் வேலை செய்பவர்'' என்றும் குறிப்பிட்டு திட்டமிட்டே இந்த மோசடி செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு விவசாயிக்கு நிலம் இருந்தும் அவர் தற்கொலை செய்து கொண்டால், அதற்கு கடன் சுமையோ, விவசாயப் பிரச்சினைகளோ காரணமல்ல; குடும்பப் பிரச்சினைகள், நோய்கள், குடிப்பழக்கம், வரதட்சினை முதலானவைதான் காரணம் என்று அயோக்கியத்தனமாகப் பதிவு செய்யப்பட்டு கிரிமினல்தனமாக இந்தப் புள்ளிவிவரக் கணக்குத் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மோசடியின் மூலம் 12 மாநிலங்களில் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் நடக்கவில்லை என்று கணக்கு காட்டினாலும், அதே தேசிய குற்றப்பதிவு ஆணையகத்தின் புள்ளிவிவரப்படி விவசாயம் சார்ந்த பிற துறைகளில் தற்கொலைச் சாவுகள் அதிகரித்துள்ளன.

விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளை இழிவுபடுத்தி வக்கிரமாகப் பேசிய விவசாய அமைச்சர் ராதாமோகன் சிங்.



கிராமப்புறங்களில் தொடரும் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளை வருவாய்த்துறை அதிகாரிகள் நேரில் வந்து விசாரித்துப் பதிவு செய்வதில்லை. கிராம நிர்வாக அலுவலரது பதிவேடுகளிலிருந்துதான் அவர்கள் இத்தகைய மரணங்களைப் பற்றிக் கணக்கிடுகின்றனர். இதனால் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் பற்றிய விவரங்களும் தற்கொலைக்கான காரணங்களும் முழுமையாக வெளிவருவதில்லை. மேலும், விவசாயிகளுக்கான அரசின் நிவாரணங்களும் மானியங்களும் நிலமுள்ளவர்களுக்கு மட்டுமே என்பதாக உள்ளதால், அத்த

கையோரை மட்டுமே விவசாயிகள் என்றும், மற்றவர்களை விவசாயக் கூலிகள் அல்லது பிற வேலைகளில் ஈடுபடுபவர் என்றும் வருவாய்த்துறையினர் மோசடியாகப் பதிவு செய்கின்றனர். இதனால்தான் மோடி ஆட்சியில் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் குறைந்துள்ள அதிசயம் நடந்துள்ளது.

புள்ளிவிவரக் கணக்கு காட்டி விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் குறைந்துவிட்டதாக மாய்மாலம் செய்தாலும், மோடி ஆட்சிக்கு வந்த பின் கடந்த ஓராண்டு காலத்தில் விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் 20 சதவீத அளவுக்கு அதிகரித்துள்ளன என்று பல்வேறு விவசாய சங்கங்கள் குற்றம் சாட்டுகின்றன. பழங்குடியின விவசாயிகளை, நிலமற்றவர்கள் - கூலி வேலை செய்பவர்கள்- விவசாயிகள் அல்லாதவர்கள் என்று காட்டி இம்மோசடிப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது என்று சாடுகிறார் விதர்பா மக்கள் போராட்டக் குழு (VJAS) தலைவர் கிஷோர் திவாரி. விவசாயிகள் தற்கொலைச் சாவுகள் பற்றி ஆய்வு செய்துவரும் இந்திரா காந்தி வளர்ச்சி-ஆராய்ச்சிக் கழகத்தின் (IGIDR) பேராசிரியரான சிறீஜித் மிஸ்ரா, விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளைக் குறைத்துக் காட்டுவதற்காகவே திட்டமிட்டே இந்த மோசடியான புள்ளிவிவரக் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது என்று குற்றம் சாட்டுகிறார்.

தேசிய குற்றப்பதிவு ஆணையகமானது, போலீசு நிலைய குற்றப் பதிவேடுகளிலிருந்துதான் இந்த புள்ளிவிவரப் பட்டியலைத் தயாரித்துள்ளது. போலீசார் ஒரு தற்கொலைச் சாவை எப்படித் திரித்துப் புரட்டிக் குறிப்பிடுவார்கள் என்பதை யாவரும் அறிவர். மாண்டுபோன விவசாயியின் பெயரில் பெயரில் நிலம் இருந்தால்தான், ஒரு விவசாயி தற்கொலை செய்து கொண்டதாகப் போலீசார் குறிப்பிடுகின்றனர். தற்கொலை செய்து கொண்ட விவசாயியின் தந்தை அல்லது உறவினர் பெயரில் நிலம் இருந்தால், மாண்டு போனவரை விவசாயி என்று குறிப்பிடுவதில்லை. தற்கொலை செய்து கொண்டவர் ஒரு பெண்ணாக இருந்தால், ஒரு விவசாயியின் மனைவி என்றுதான் குறிப்பிடுகின்றனர். பெண்களின் பெயரில் நிலம் இல்லாததை வைத்து, மாண்டுபோன பெண் விவசாயிகளின் தற்கொலை சாவுகள் திட்டமிட்டே மறைக்கப்படுகின்றன.

இதேபோல, குத்தகை விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டால், விவசாயிகளின் தற்கொலையாக போலீசாரால் காட்டப்படுவதில்லை. மாறாக, விவசாயக் கூலியின் மரணமாக மாற்றிப் பதிவிடப்படுகின்றன. குத்தகையானது பெரும்பாலும் வாய்வழியாக நம்பிக்கையின் அடிப்படையில்தான் நடப்பதால், பத்திரங்களோ ஆவணங்களோ இல்லை என்றும், அவர் பெயரில் நிலம் இல்லை என்றும் காரணம் காட்டி இத்தகையோரின் தற்கொலைச் சாவுகள் புறக்கணிக்கப்படுகின்றன.

மகசூல் குறைவு, கந்துவட்டிக்காரர்களின் அச்சுறுத்தல், சர்க்கரை ஆலைகள் நிலுவைத் தொகை வழங்காததால் ஏற்பட்ட கடன் சுமை, வங்கியில் பெற்ற கடனை அடைக்க முடியாத நிலையில் வங்கி நிர்வாகம் நிலத்தை ஏலம் விடுவதற்கான நோட்டீசு அனுப்பியதால் மனமுடைந்துபோவது - எனப் பல்வேறு காரணங்களால் விவசாயிகளின் தற்கொலை செய்து கொள்ளும் கொடுமை நம் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, தனியார்மயம் - தாராளமயம் திணிக்கப்பட்ட கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் நாடு முழுவதும் ஏறத்தாழ 3.2 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஆனாலும், நாட்டின் முதுகெலும்பான விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளைத் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதாமல், இன்றைய அரசியலமைப்பு முறையே இத்தகைய சாவுகளை அற்ப விவகாரமாக ஒதுக்கித் தள்ளுகிறது.




விவசாயிகளின் தற்கொலைகளைத் தடுக்கப் போவதாகவும், விவசாயத்தில் முதலீட்டை அதிகரிக்கப் போவதாகவும் தேர்தல் அறிக்கையில் சவடால் அடித்ததோடு, விவசாய அமைச்சகத்தை, ''விவசாயம் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்'' என்று பெயர் மாற்றியுள்ளதாக ஆகஸ்டு 15 அன்று ஆரவாரமாக அறிவித்து விவசாயிகள் நல அரசாக காட்டிக் கொண்டு மோடி கும்பல் நாடகமாடுகிறது. ஆனால், தனது ஆட்சியில் விவசாயிகளின் தற்கொலைகளே நடக்கவில்லை என்று கிரிமினல்தனமாக புள்ளிவிவர மோசடி செய்வதோடு, விவசாயிகளின் நிலங்களைப் பறிக்கும் நிலம் கையகப்படுத்தல் சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வெறியோடு அலைந்து கொண்டிருக்கிறது. சொல்லுக்கும் செயலுக்கும் நேர்மையற்ற மோடி கும்பல், காங்கிரசை விஞ்சிய கயவாளிகளின் கூட்டம்தான் என்பதை நிரூபிக்க இதை விட வேறென்ன சான்று வேண்டும்?

● குமார்

# காட்டுவேட்டை காசு வேட்டையானது!

**மாவோயிச பயங்கரவாதிகளை ஒழிக்கப்போவதாகக் கூறி இறக்கிவிடப்பட்ட சி.ஆர்.பி.எஃப். படை ஜார்கண்டு மாநில போலீசோடு சேர்ந்து போலி மாவோயிஸ்டுகளை உருவாக்கி, சரணடையச் செய்து, பல கோடி ரூபாய் பெறுமான மோசடியை நடத்தியிருக்கிறது.**

பமேஷ் பிரசாத், ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள குண்ட்டி மாவட்டத்தைச் சேர்ந்த 21 வயதான பழங்குடியின இளைஞர். அவர் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு ஜார்க்கண்ட் மாநிலத் தலைநகர் ராஞ்சியிலுள்ள கீழ்சந்தை போலீசு நிலையத்தில், ''தனக்கு மத்திய ரிசர்வ் போலீசு படையில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி, தினேஷ் பிரஜாபதி, ரவி போத்ரா ஆகிய இருவரும் தன்னிடமிருந்து இரண்டு இலட்ச ரூபாயை வாங்கிக் கொண்டு ஏமாற்றிவிட்டதாக''க் குற்றஞ்சுமத்தி புகார் ஒன்றை அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் தினேஷ் பிரஜாபதியும் ரவி போத்ராவும் கைது செய்யப்பட்டாலும், பமேஷ் பிரசாத்துக்கு வேலையும் கிடைக்கவில்லை, அவர் கையூட்டாக அளித்த பணமும் கிடைக்கவில்லை, அவர் அளித்த புகாரின் மீது மேற்கொண்டு விசாரணையும் நடக்கவில்லை.

பமேஷ் பிரசாத் ஏமாற்றப்பட்டிருப்பது, நாள்தோறும் நாடெங்கும் நடந்து வரும் சாதாரண ''சீட்டிங்'' விவகாரம் போன்றதல்ல. இந்தப் புகாரை முறையாக விசாரணை செய்தால், குற்றவாளிக் கூண்டில் தினேஷ் பிரஜாபதியும், ரவி போத்ராவும் மட்டும் நிற்கமாட்டார்கள். ஜார்க்கண்ட் மாநில போலீசும், அம்மாநிலத்தில் மாவோயிஸ்டுகளை ஒழிப்பதற்காக இறங்கியிருக்கும் மைய ரிசர்வ் போலீசு படையும் (சி.ஆர்.பி.எஃப்.) கூண்டில் ஏற வேண்டியிருக்கும். ஏனெனில், பமேஷ் பிரசாத் அளித்துள்ள புகார் மைய ரிசர்வ் போலீசு படையும் ஜார்க்கண்ட் மாநில போலீசும் தேசப் பாதுகாப்பு, மாவோயிச தீவிரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் நடத்தியிருக்கும் மிகப்பெரும் கிரிமினல் மோசடித் தனத்தை, ஊழலை அம்பலப்படுத்தும் துருப்புச் சீட்டாக உள்ளது.

பமேஷ் பிரசாத்திடமிருந்து இரண்டு இலட்ச ரூபாயைப் பெற்றுக் கொண்ட தினேஷ் பிரஜாபதி, ரவி போத்ராவை பமேஷ் பிரசாத்திற்கு அறிமுகப் படுத்தியிருக்கிறார். ரவி போத்ரா பமேஷ் பிரசாத்திடம், ''போலீசிடம் சரணடையும் மாவோயிச தீவிரவாதிகளை மைய ரிசர்வ் போலீசு படையில் சேர்த்துக் கொள்ளும் திட்டமொன்று உள்ளது. நீ செய்யவேண்டியதெல்லாம், நானொரு நக்சலைட்டு எனக் கூறி ஆயுதத்தோடு போலீசிடம் சரணடைந்து, சில மாதங்கள் சிறையில் கழிக்க வேண்டும். அதன் பிறகு திருந்திய தீவிரவாதி என்ற அடிப்படையில் மைய ரிசர்வ் போலீசு படையில் உனக்கு வேலை கிடைக்கும்'' எனக் கூறியதற்கு ஏற்ப, ஆயுதத்தோடு சரணடைந்த பமேஷ் பிரசாத், ஜார்க்கண்ட் மாநிலத் தலைநகர் ராஞ்சியில் அமைந்துள்ள மைய ரிசர்வ் போலீசின் சிறப்பு அதிரடிப் படை (கோப்ரா படை) முகாமில் அடைக்கப்பட்டார்.

அந்த முகாமில் பமேஷ் பிரசாத் போலவே, பல நூறு பழங்குடியின இளைஞர்கள் - ஏறத்தாழ 514 பேர் - மாவோயிச தீவிரவாதி எனக் கூறி சரணடைந்து, மைய ரிசர்வ் போலீசு படையில் சேரும் கனவோடு நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அனை

சி.ஆர்.பி.எஃப். படை அதிகாரிகளால் போலி மாவோயிஸ்டுகளாகத் தயாரிக்கப்பட்டு, சரணடையச் செய்யப்பட்ட பழங்குடியின இளைஞர்கள்.



வரும் இருபத்தைந்து வயதுக்கு உட்பட்ட பழங்குடியின இளைஞர்கள். பத்தாவதோ, +2வோ, ஐ.டி.ஐ. படிப்போ முடித்து விட்டு வேலைதேடி அலைந்தவர்கள். அவர்கள் ஒவ்வொரு வருக்கும் ரவி போத்ராவையும், தினேஷ் பிரஜாபதியையும் தெரிந்திருந்தது. அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு பழங்குடியின மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்றாலும், அவர்களின் எதிர்பார்ப்பு ஒன்றாகவே இருந்தது. அரசுப் படையில் சேர்ந்துவிட்டால் தமது குடும்பத்தைப் பிடித்தாட்டும் வறுமையிலிருந்து தப்பித்துவிடலாம் என்ற ஆசையில், தமக்குச் சொந்தமான வயல்வெளிகளை விற்றுவிட்டோ, கடன் வாங்கியோ ஒரு இலட்ச ரூபாய் முதல் இரண்டரை இலட்ச ரூபாய் வரை இலஞ்சமாகக் கொடுத்துவிட்டு, அவர்கள் அம்முகாமை வந்தடைந்தனர். வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் ஆறு மாதம், ஒரு வருடம் என அந்த முகாமில் அடைபட்டு, வேலைக்கான உத்தரவு இன்றோ அல்லது நாளையோ வந்துவிடும் என்ற எதிர்பார்ப்பில் காத்துக் கிடந்து வந்தனர்.

ஆனால், பமேஷ் பிரசாத் உள்ளிட்டு, அவர்களுள் ஒருவருக்குக்கூட அரசுப் படையில் வேலை கிடைக்கவில்லை. மாறாக, சரணடைந்த தீவிரவாதி என்ற முத்திரையோடு அவர்கள் ராஞ்சி முகாமிலிருந்து துரத்தியடிக்கப்பட்டனர். இன்று அந்த முத்திரையே வேறு வேலை தேடுவதற்கு பெருந்தடையாக மாறிவிட்டது. கொடுத்த பணத்தை மீட்க அதிகார வர்க்கத்தோடு பமேஷ் பிரசாத் போராடிக் கொண்டிருக்கிறார் என்றால், சுந்தர குஜுர் 400 மைல்களுக்கு அப்பால் உ.பி.யிலுள்ள ஒரு செங்கல் சூளையில் கொத்தடிமையைப் போல வேலை பார்த்துவருகிறார். ''இந்த விசயத்தில் ஒருபோதும் நீதி கிடைக்காது என்று எனக்குத் தெரியும். ஆனால், அடகு வைக்கப்பட்ட குடும்ப நிலத்தை மீட்க 40,000 ரூபாய் நான் சம்பாதிக்க வேண்டும் '' என்கிறார், அவர்.



**சுந்தர குஜுர் (24),**
**நாம்கும், ராஞ்சி.**

**60,000 ரூபாயை இலஞ்சமாகக் கொடுத்துவிட்டு, ஓராண்டு சிறையில் கழித்த சுந்தர குஜுர் தற்பொழுது உ.பி. மாநிலத்திலுள்ள காசிபூர் பகுதியிலுள்ள செங்கல் சூளையில் கூலியாக வேலை பார்த்து வருகிறார்.**

**''எனக்கு ஒருபோதும் நீதி கிடைக்காது. அடகு வைக்கப்பட்ட எனது நிலங்களை மீட்பதற்கு நான் எப்பாடுபட்டாவது 40,000 ரூபாயைச் சேமித்தாக வேண்டும்.''**

•••

தேசப் பாதுகாப்பு, தேச ஒருமைப்பாடு, தீவிரவாத ஒழிப்பு என்ற பெயர்களில் இராணுவமும், போலீசும் போலி மோதல் கொலைகள், பாலியல் வன்கொடுமைகள், கொட்டடிச் சித்திரவதைகளை நாடெங்கும் நடத்தி வருகின்றன. அப்பாவிகளைக்கூட மாவோயிச தீவிரவாதிகளாக, முசுலீம் தீவிரவாதிகளாக, அல்லது அவர்களது ஆதரவாளர்களாகப் பொய்க் குற்றஞ்சுமத்தி சிறையில் அடைத்து சித்திரவதை செய்து வருகின்றன. அத்தகைய குற்றங்களின் இன்னொரு பக்கம்தான் இந்தப் போலி மாவோயிஸ்டு சரணடைவு ஊழல். அவை மனித உரிமை மீறல் குற்றங்கள் என்றால், இந்த ஊழல் கடுந்தண்டனைக்குரிய சதி, மோசடி, அதிகார முறைகேடுகள் நிறைந்த கொடுங்குற்றம்.

மத்தியில் காங்கிரசு கூட்டணி அரசு ஆட்சியில் இருந்தபொழுது, இடதுசாரி தீவிரவாத அமைப்புகளிலிருந்து விலகி போலீசிடம் சரணடைபவர்களுக்கு வழங்கப்படும் மறுவாழ்வு நிதியைக் கூட்டித் தரப்போகும் திட்டம் அறிவிக்கப்பட்ட நேரத்தில்தான் ஜார்கண்டில் இந்த போலி மாவோயிஸ்டு சரணடைவு ஊழலும் தீவிரமாக நடந்தது. இந்த ஊழலின் வெளிப்புற முகமாக அம்பலமாகியிருக்கும் ரவி போத்ரா, சில்லறைத்தனமான போர்ஜரி வேலைகளைச் செய்யும் சாதாரண கிரிமினல் பேர்வழி அல்ல. போலீசாலும், இராணுவத்தாலும் தயார்படுத்தப்பட்டவன். நாகலாந்து மாநில போலீசில் கான்ஸ்டபிளாகப் பணியாற்றிய அவன், ஒரு பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்த வழக்கில் பணிநீக்கம் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, நான்கே நாட்களில் பிணையில் வெளியே வந்தான். அதன் பிறகு, மணிப்பூர், அசாம் மாநிலங்களில் இராணுவத்திற்கு ஆள் காட்டியாக வேலை செய்திருக்கிறான்.

இந்த அனுபவம், தொடர்புகளோடு ஜார்கண்டிற்கு வந்து சேர்ந்த அவன்,

**குல்தீப் பாரா (24)**
**பால்கோ, குல்மா மாவட்டம்.**

**ஒரு இலட்ச ரூபாய் இலஞ்சமாகக் கொடுத்த குல்தீப் பாரா, ஆயுதத்தோடு சரணடைந்து எட்டு மாதங்கள் சிறையில் கழித்தார்.**


**''அரசு அதிகாரிகள் எங்களுக்கு நன்னடத்தை சான்றிதழை வழங்க மறுக்கிறார்கள். மாவோயிஸ்டுகளும் எங்களைச் சந்தேகிக்கிறார்கள். எங்களது நிலை இருதலைக் கொள்ளி எறும்பு போல ஆகிவிட்டது.''**



**கரம் தயாள் டிக்கா (25)**
**ரெவாரா, குல்மா மாவட்டம்.**

**50,000 ரூபாய் இலஞ்சமாகக் கொடுத்த கரம் தயாள் டிக்கா, ஒன்பது மாதங்கள் சிறையில் கழித்தார்.**

**“முதல்வராக இருந்த ஹேமந்த் சோரன் சி.பி.ஐ. விசாரணை நடத்தப் போவதாக அறிவித்த பொழுது, எனக்குக் கொஞ்சம் நம்பிக்கை ஏற்பட்டது. ஆனால், இப்பொழுது எல்லாம் வறண்டு போய்விட்டது.”**



தன்னை ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியாகப் பழங்குடியின இளைஞர்களிடம் காட்டிக் கொண்டான். அவனின் இந்த ‘‘பில்ட்-அப்’’பிற்கு அனைத்துமாக இருந்தது, சி.ஆர்.பி.எஃப். படை. அவன் ஊரைச் சுற்றி வருவதற்கு சி.ஆர்.பி.எஃப்.க்குச் சொந்தமான ஜீப்பும் அவனுக்கு சி.ஆர்.பி.எஃப். சிப்பாய்களின் பாது காப்பும் வழங்கப்பட்டது. இதன் மூலம் அவனது மோசடி வேடத்திற்கு ஒரு நம்பகத்தன்மை உருவாக்கப் பட்டது.

இந்தப் போலி மாவோயிஸ்டு சரணடைவு ஜார்கண்டு மாநில போலீசு டி.ஜி.பி. ஜி.எஸ்.ராத் முன்னிலையிலும் நடந்தது. சரணடைந்த இளைஞர்களுள் ஒருவர்கூடச் சிறையில் அடைக்கப்படவில்லை. அவர்கள் மீது எந்த வழக்கும் புனையப்படவில்லை. மாறாக, அவர்கள் அனைவரும் மத்திய ரிசர்வ் படையின் முகாமில் அடைக்கப்பட்டு, அம்முகாமும் மத்திய ரிசர்வ் போலீசு படையாலேயே பாதுகாக்கப்பட்டது. அவர்களுக்குத் தேவையான உணவு ராஞ்சியிலுள்ள மத்திய சிறைச்சாலையிலிருந்து போலீசு அதிகாரிகளின் வாய்மொழி உத்தரவின் மூலம் அனுப்பப்பட்டிருக்கிறது.

முகாமில் இருந்த இளைஞர்கள் அனைவருக்கும் நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் போலீசுக்குரிய உடற்பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் விரும்பினால் நகரத்திற்குள் சென்றுவரவும் அனுமதிக் கப்பட்டுள்ளனர். மேலும், அவர்கள் சொந்த கிராமத்திற்கு ரிசர்வ் போலீசு படையின் வாகனங்களில் சென்று திரும்பியிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்த்த கிராமத்துப் பழங்குடியின இளைஞர்கள் ஒருவர் பின் ஒருவராக இந்த மோசடி வலைக்குள் விழுந்துள்ளனர். இந்த 514 பேரிடமும் தலைக்கு ஒன்று முதல் இரண்டரை இலட்சம் ரூபாய் வரை இலஞ்சம் பெறப்பட்டிருப்பது ஒருபுறமிருக்க, தீவிரவாதிகள் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு அரசு கொடுத்த நிதியையும் போலீசும் மத்திய ரிசர்வ் போலீசு படையும் பங்கு வைத்து சுருட்டிக் கொண்டுவிட்டன.

இந்த 514 பேரும் கையில் நவீன ஆயுதங்களுடன் ஜார்கண்ட் மாநில போலீசிடம் சரணடைந்துள்ளனர். இந்தப் போலி மாவோயிஸ்டு சரணடைவு ஊழலே மத்திய ரிசர்வ் போலீசு படையும் ஜார்கண்ட் மாநில போலீசும் நடத்திய சதி என்பதால், அந்தப் படைகளின் அதிகாரிகளைத் தவிர, வேறு வழியில் இந்த நவீன ஆயுதங்கள் சரணடைந்த பழங்குடியின இளைஞர்களுக்குக் கிடைத்திருக்க முடியாது. இத்துணை பெரும் தொகையிலான, பல்வேறுவிதமான ஆயுதங்களை போலீசு அதிகாரிகள் சப்ளை செய்திருக்கிறார்கள் என்பது, எவ்விதக் கணக்கிலும் வராத, சட்டவிரோதமான, கள்ளத்தனமான ஆயுதக் கிடங்குகளை போலீசும் துணை இராணுவமும் நடத்திவருவதை அம்பலப் படுத்துகிறது.

2012-ஆம் ஆண்டின் இறுதியில் மத்திய ரிசர்வ் போலீசு படையில் ஐ.ஜி.யாக நியமிக்கப்பட்ட எம்.வி.ராவ், ராஞ்சி முகாமில் அடைக்கப்பட்டிருந்த இளைஞர்கள் குறித்துப் பல்வேறு சந்தேகங்களை எழுப்பி, இது குறித்து விசாரிக்குமாறு ஜார்கண்ட் மாநில போலீசுக்குக் கடிதம் எழுதினார். இதன் பிறகு, முகாமில் இருந்த இளைஞர்களைச் சொந்த ஊருக்குத் துரத்தியடித்ததுதான் நடந்ததேயொழிய, விசாரணை எதுவும் நடைபெறவில்லை. பமேஷ் பிரசாத் மார்ச் 2014-இல் போலீசில் புகார் கொடுத்த பிறகு ரவி போத்ராவும் தினேஷ் பிரஜாபதியும் கைது செய்யப்பட்டு, இந்தப் புகார் குறித்த விசாரணையை சி.பி.ஐ.யிடம் ஒப் படைக்கப் போவதாக சவுண்டு விடப்பட்டதைத் தாண்டி எதுவும் நடைபெறவில்லை.

‘‘போலீசு மற்றும் சி.ஆர்.பி.எஃப். அதிகாரிகள்தான் தன்னை இயக்கியதாக’’ ரவி போத்ரா ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்த பிறகும்கூட எந்தவொரு அதிகாரியும்,



**விஜய் கோபே (24)**
**பாலி, ராஞ்சி மாவட்டம்.**

**ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய் இலஞ்சமாகக் கொடுத்த விஜய் கோபே, கையெறி குண்டுகளோடு சரணடைந்து, ஒன்றரை ஆண்டுகள் சிறையில் கழித்தார்.**

**“இப்பொழுது எந்த நம்பிக்கையும் எனக்கு இல்லை. கையில் காசில்லாததால் வேறு மாநிலத்திற்கு வேலை தேடிச் செல்லவும் என்னால் இயலவில்லை.”**

போலீசுக்காரனும் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை. மூத்த வழக்குரைஞரான ராஜீவ் குமார், ''இந்த ஊழல் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்'' எனக் கோரி ஜார்கண்ட் உயர் நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்த ஊழல் புகாரை முறையாக விசாரிக்கத் தொடங்கினால் பல உயர் போலீசு அதிகாரிகள் மாட்டிக் கொள்வார்கள் என்பது மட்டுமல்ல; சரணடைந்த இடதுசாரி தீவிரவாதிகள் மறுவாழ்வுத் திட்டம் என்பதே துணை இராணுவப் படைகளும், போலீசும் கொள்ளையடிப்பதற்கான ஏற்பாடாக இருந்துவருவதும் அம்பலமாகிவிடும் என்பதால்தான் இந்த ஊழல் புகாரை ஊறுகாய் பானைக்குள் போட்டு வைத்திருக்கிறது, அரசு.



**கிருஷ்ணா ஓரான்** (25)
**மந்தர், ராஞ்சி மாவட்டம்.**

**தனது குடும்ப நிலத்தை அடகு வைத்து ரூ.1.8 இலட்சத்தை இலஞ்சமாகக் கொடுத்த கிருஷ்ணா ஓரான், ஆறு மாதங்கள் சிறையில் கழித்தார்.**

**''என் மீது குத்தப்பட்டுள்ள சரணடைந்த நக்சலைட்டு என்ற முத்திரையை அழிப்பதுதான் எனது முதல் கவலை''**

பமேஷ் பிரசாத், சுந்தர குஜுர், குல்தீப் பாரா, தேவ்தத் கோபே, சுக்தேவ் முண்டா, ரோஷன் குடியா, கரம் தயாள் டிக்கா, ரோஷன் திர்கே, அம்ரித் பிரகாஷ் திர்கே, விஜய் கோபே - என இந்த மோசடியில் சிக்கவைக்கப்பட்ட ஒவ்வொருவரின் எதிர்காலமும் இன்று இருண்டு போய்விட்டது. அவர்கள் அனைவரும் இன்று அரசிடம் வேலை கேட்கவில்லை. தங்களை ஏமாற்றி பறிக்கப்பட்ட பணத்தைக் கேட்கவில்லை. மாறாக, தங்கள் பகுதி போலீசு நிலையத்திலிருந்து, ''நாங்கள் மாவோயிச தீவிரவாதி இல்லை'' என்ற நன்னடத்தைச் சான்றிதழை வழங்குமாறுதான் கோருகிறார்கள். இந்த 514 பேரும் ஏமாற்றப்பட்டுள்ளார்கள் என்பதை ஒத்துக் கொண்டுள்ள அரசாங்கமோ, இந்த மோசடி குறித்து விசாரணையும் நடத்தவில்லை. அவர்கள் கோருகிற நன்னடத்தைச் சான்றிதழையும் வழங்க மறுக்கிறது.

எப்பேர்பட்ட பொறுப்பற்ற, இரக்கமற்ற, மோசடியான அரசு அமைப்பின் கீழ் வாழுமாறு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம் என்பதை இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டியிருப்பதை வாசகர்கள் நிச்சயம் உணர முடியும். ஆனால், நாம் புரிந்துகொள்ள வேண்டியது இதனை மட்டுமல்ல. மாவோயிச தீவிரவாதம்தான் மிகப் பெரும் உள்நாட்டு அபாயம் என்றும், நாட்டின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் எதிரானது என்றும் முத்திரை குத்தி, அதனை ஒழிப்பதற்காகப் பல ஆயிரம் கோடி ரூபாய்கள் வெளிப்படையாக மட்டுமின்றி, நாடாளுமன்றத்துக்கே தெரியாமல் இரகசியமாகவும் செலவழிக்கப்படுகிறது. அரசுப் படைகள் மாவோயிச தீவிரவாதத்துக்கு எதிராக உயிரைப் பணயம் வைத்துப் போராடுவதாகவும், அதனால் அப்போரில் நடைபெறும் அத்துமீறல்களைப் பெரிதுபடுத்தக் கூடாதென்றும் கூறி, அரசுப் படைகளின் மனித உரிமை மீறல்களுக்கு வக்காலத்து வாங்கப்படுகிறது.

ஆனால், ஜார்கண்டில் நடந்துள்ள இந்த ஊழல் ''மாவோயிச தீவிரவாதத்தை ஒழிப்பது'' என்ற கடமையை நிறைவேற்றுவதற்காகப் போராடிக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் துணை இராணுவப் படையும், போலீசும், ஐ.பி.எஸ். அதிகாரிகளும் போலியான மாவோயிஸ்டுகளை உருவாக்கியிருப்பதை அம்பலப்படுத்துகிறது. அரசுப் படைகள் தாம் நிறைவேற்ற வேண்டிய கடமைக்கு எதிராகச் செயல்பட்டிருப்பதை அம்பலப்படுத்துகிறது. கேள்விக்கிடமற்ற புனிதக் கடமைகளாகக் கூறப்படும் தேசப் பாதுகாப்பு, தீவிரவாத ஒழிப்பு போன்றவற்றைக் கூட அதிகார வர்க்கம் தனது சொந்த ஆதாய நோக்கிலிருந்து மட்டுமே அணுகியிருப்பதை, அதற்கு அப்பால் அக்'கடமைகளின்'பால் அவர்களுக்கு எவ்வித அக்கறையும் கிடையாது என்பதை அம்பலப்படுத்துகிறது. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமையை நிறைவேற்றும் தகுதியும் நம்பகத்தன்மையும் இல்லாத, கொள்ளைக்கூட்டமாக அரசுப் படைகள் சீரழிந்து நிற்பதை அம்பலப்படுத்துகிறது.

வேலியே பயிரை மேய்வதா என்பன போன்ற அறத்திற்கெல்லாம் இப்பொழுது அதிகாரக் கட்டமைப்பில் இடமில்லை. மாறாக, பயிரை மேய்வதே வேலியின் கடமை என்பதாக அதிகார வர்க்கத்தின் செயல்பாடுகளும், இந்த அதிகார கட்டமைப்பும் மாறிவிட்டதைதான் இத்தகைய ஊழல்களும், அதிகார முறைகேடுகளும், மனித உரிமை மீறல்களும் எடுத்துக்காட்டுகின்றன.

● செல்வம்

## அறிவிப்பு!

**''அரசு: அனைவருக்கும் பொதுவானதோ, ஜனநாயகமானதோ அல்ல!'' கட்டுரைத் தொடர் இவ்விதழில் இடம்பெறவில்லை. அடுத்த இதழோடு அத்தொடர்கட்டுரை நிறைவடைகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**– ஆசிரியர் குழு.**

# வியாபம் ஊழல்:

2

# பார்ப்பன கிரிமினல்தனம்!

ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பல் ஊழல் செய்தால், அது எத்துணை கிரிமினல்தனமாகவும், சதிகள் நிறைந்த பயங்கரமானதாகவும் இருக்கும் என்பதற்கு வியாபம் ஊழலே சாட்சி.


**எம்.**பி.பி.எஸ். மற்றும் முதுகலை மருத்துவ படிப்புகளுக்கான (எம்.டி., எம்.எஸ்.) நுழைவுத் தேர்வுகளில் மோசடிகள் செய்து, இலட்சக்கணக்கில் இலஞ்சம் கொடுத்த மாணவர்களுக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சீட்டுகளை ஒதுக்கிக் கொடுப்பது வியாபம் ஊழலில் கேந்திரமான புள்ளியாக இருந்திருக்கிறது. இந்த நுழைவுத் தேர்வு மோசடிகள், முன்னாபாய் ஸ்டைல், ஆள் மாறாட்டம், ரயில் இன்ஜின்-பெட்டி முறை, விடைத்தாள்களைத் திருத்துவது - என நான்கு வழிகளில் நடைபெற்றிருப்பதைக் கடந்த இதழிலேயே குறிப்பிட்டிருந்தோம்.

மருத்துவ நுழைவுத் தேர்வு வினாத்தாட்கள் இடைத்தரகர்களுக்குக் கசிய விடப்படும். அவர்கள் அதனைப் ''புதிர்களை விடுவிப்பவர்களிடம்'' எடுத்துச் செல்வார்கள். நுழைவுத் தேர்வு வினாக்களுக்கு அவர்கள் கூறும் பதில்கள் ''வாய்ஸ் ரெக்கார்டரில்'' பதிவு செய்யப்பட்டு, அவை இலஞ்சம் கொடுத்த மாணவர்களுக்கு அளிக்கப்படும் - இதுதான் முன்னாபாய் ஸ்டைல். இதைப் படிக்கும் வாசகர்களுக்கு ''வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்.'' திரைப்படத்தில் கதாநாயகன் கமல்ஹாசன் தேர்வு எழுதும் காட்சி நினைவுக்கு வந்தால், உங்கள் நினைவுத்திறன் அபாரம்தான். அத்திரைப்படத்தின் மூலமான இந்தி திரைப்படம் முன்னாபாய் எம்.பி.பி.எஸையொற்றிதான் இந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது, ஆள்மாறாட்டம். இலஞ்சம் கொடுத்த மாணவனுக்குப் பதிலாக வேறு ஒருவரை நுழைவு தேர்வு எழுத வைத்து, அதன் மூலம் இலஞ்சம் கொடுத்த மாணவனை வெற்றி பெறச் செய்து மருத்துவக் கல்லூரியில் நுழைத்துவிடுவதுதான் ஆள்மாறாட்ட முறை. இதற்கு ஏற்ப நுழைவுத் தேர்வு அனுமதிச் சீட்டில் மோசடிகள் செய்யப்பட்டிருக்கும்; தேர்வுக் கண்காணிப்பாளர்களும் கவனிக்கப்பட்டிருப்பார்கள். இளம் மருத்துவர்களும், மருத்துவக் கல்லூரி மாணவர்களும் இந்த ஆள்மாறாட்ட மோசடியில் தேர்வு எழுத பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்துள்ள சிறப்பு அதிரடிப் படை, ஏறத்தாழ 300 பேர் இந்த மோசடியின் மூலம் மருத்துவக் கல்லூரிகளில் நுழைந்திருப்பதாக வழக்கு பதிவு செய்திருக்கிறது.

வியாபம் ஊழலில் மிகப்பெரும் மோசடித்தனமானது ரயில் இன்ஜின்-பெட்டி முறை. இதன்படி, நுழைவுத் தேர்வு நடைபெறும் பொழுது இலஞ்சம் கொடுத்த இரண்டு மாணவர்களுக்கு நடுவில் திறமைமிக்க ''புதிர் விடுவிப்பவர்'' மூன்றாவது மாணவராக அமர வைக்கப்படுவார். இதற்கு ஏற்ப அம்மூவருக்கும் தேர்வு எண்ணும், தேர்வு மையமும், தேர்வு அறையும் ஒதுக்கப்படும். தனது அருகில் அமர்ந்துள்ள மற்ற இருவருக்கும் விடைகளைச் சொல்லிக் கொடுத்து, அவர்களை எழுத வைப்பதுதான் இந்த மூன்றாவது நபரின் வேலை. நுழைவுத் தேர்வில் இந்த மூன்று பேரும் தேர்ச்சி பெறுவார்கள். இலஞ்சம் கொடுத்த இரு மாணவர்களுக்கும் அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்கப்படும். அந்த 'மூன்றாவது மாணவனுக்கு'த் தனியார் மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்கப்படும். அந்த மாணவன் தனியார் கல்லூரியில் சேராமல் ஒதுக்கப்பட்ட இடத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுவான். பிறகு அந்த இடம் தனியார் மருத்துவக் கல்லூரி நிர்வாகத்தால் கொழுத்த பணத்திற்கு நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் விற்கப்படும்.

தனியார் மருத்துவக் கல்லூரி அதிபர்கள் நடத்திய ஊழலைக் கண்டு கொள்ளாமல் இருப்பதற்காக, சௌஹான் அரசுக்கு ஒவ்வொரு ஆண்டும் பத்து கோடி ரூபாய் இலஞ்சமாக அளிக்கப்பட்டதை வாக்குமூலமாக அளித்திருக்கும் யோகேஷ் உப்ரித்.



வியாபம் ஊழலை இயக்கியவர்களுக்கும், தனியார் மருத்துவக் கல்லூரி நிர்வாகத்திற்கும் பணத்தை

வாரிக் கொடுக்கும் காமதேனுவாக இந்த ரயில் இன்ஜின்-பெட்டி மோசடி இருந்து வந்திருக்கிறது. ஏறத்தாழ 1,200 மாணவர்கள் இந்த மோசடியின் மூலம் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்திருப்பதாக வழக்கு பதிவு செய்திருக்கிறது, சிறப்பு அதிரடிப் படை.

விடைத்தாளைத் திருத்துவது நான்காவது வழி. இதன்படி, இலஞ்சம் கொடுத்த மாணவர்களி டம் விடைத்தாளில் 10 சதவீதக் கேள் விகளுக்கு மட்டும் விடைகளைக் குறிக்குமாறு சொல்லப்படும். மீதமுள்ள வினாக்களுக்கான விடை களைத் தேர்வு முடிந்தவுடன் விடைத் தாளில் நிரப்புவதற்கான ஏற்பாடு களை இடைத்தரகர்கள் செய்து வைத் திருப்பார்கள். இந்த மோசடியின் மூலம் ஏறத்தாழ 50 பேர் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்திருப்பதாகக் குற்றப்பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளது, சிறப்பு அதிரடிப் படை.

மத்தியப் பிரதேசத்தில் தற்பொழுது ஆறு அரசு மருத்துவக் கல்லூரிகளும், ஏழு தனியார் மருத்துவக் கல்லூரிகளும் 16 தனியார் பல் மருத்துவக் கல்லூரி களும் உள்ளன. தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 15 சதவீத இடங்கள் வெளிநாட்டு வாழ் இந்தியர் களுக்கும், 43 சதவீத இடங்கள் நிர்வாக ஒதுக்கீட் டிற்கும், 42 சதவீத இடங்கள் அரசு ஒதுக்கீட்டிற்கு மாகப் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. அரசு ஒதுக்கீடு இடங்களை நிரப்புவதற்கான நுழைவுத் தேர்வை வியாபமும், வெளிநாட்டு வாழ் இந்தியர் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டிற்கான நுழைவுத் தேர்வை தனியார் மருத்துவக் கல்லூரிகளின் சங்கமும் நடத்தி வரு கின்றன. ஆனால், இந்த இரண்டு நுழைவுத் தேர்வு களும் பெயருக்குத்தான் நடைபெறுகின்றன என்பதும், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்கள் அனைத்தும் ஒவ்வொர் ஆண்டும் பல நூறு கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடைபெற்றுவருவதும் ஊரறிந்த இரகசியம். ம.பி. போலீ சாரால் சமீபத்தில் கைது செய்யப் பட்டுள்ள யோகேஷ் உப்ரித் என்ற கிழட்டு நரி அளித்துள்ள வாக்கு மூலம் இந்த இரகசியத்தைப் போட்டு உடைத்திருக்கிறது.

75 வயதான உப்ரித் சாதாரண நபரல்ல. ம.பி. அரசு நிறுவனமான வியாபத்தில் இயக்குநராகப் பணி யாற்றி வந்த அவர், தான் ஓய்வுபெற்ற பிறகு தனியார் மருத்துவக் கல்லூரி



வியாபம் ஊழலில் தொடர்பு இருப்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருந்தபோதும், ஆளுநர் என்ற அரசியல் சாசனத் தகுதியைப் பயன்படுத்திக் கொண்டு வழக்கு விசாரணையிலிருந்து தப்பித்துக் கொண்ட ம.பி. மாநில ஆளுநர் ராம்நரேஷ் யாதவ்.

வியாபம் ஊழலில் தொடர்பு இருப்பது அம்பலமான பிறகு, மர்மமான முறையில் இறந்துபோன ம.பி. ஆளுநர் ராம்நரேஷ் யாதவின் மகன் ஷைலேஷ் யாதவ்.



சங்கம் நடத்திவரும் பல் மருத்துவம் மற்றும் மருத்துவம் சேர்க்கை தேர் வின் (Dental and Medical Admission Test) கட்டுப்பாட்டு அதிகாரியாகப் பதவியேற்றுக் கொண்டார். தனியார் மருத்துவக் கல்லூரி சங்கமே உப்ரித்தை வேண்டி வரவழைத்து இந்தப் பதவியில் அமர வைத்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. உப்ரித்தும் தனது நன்றியைக் காட்டும் விதமாக, வியாபத்தில் நடந்துவந்த மோசடிகள் அனைத்தையும் இறக்கு மதி செய்து, தனியார் மருத்துவக் கல்லூரி அதிபர்களின் கஜானாவை கரன்சி நோட்டுக்களால் நிரம்ப வைத் தார். உப்ரித்தின் கைது, அரசு நிறுவன மான வியாபத்திற்கும், தனியார் மருத் துவக் கல்லூரி அதிபர்களுக்கும் இடையே நிலவிவரும் நெருக்கமான கிரிமினல் உறவை அம்பலத்திற்குக் கொண்டுவந்திருக்கிறது.

‘‘தனியார் மருத்துவக் கல்லூரி சங்கம் நடத்தும் நுழைவுத் தேர்வு அதன் தொடக்கம் தொட்டே மோசடி யானது என்பதையும் யார் அதிக விலை கொடுக்கிறார் களோ அவர்களுக்குத் தனியார் மருத்துவக் கல்லூரி இடங் கள் விற்பனை செய்யப்படுவதையும்’’ வாக்குமூலமாக அளித்துள்ள உப்ரித், ‘‘இலஞ்சம் கொடுத்து நுழைவுத் தேர்வை எழுதும் மாணவர்கள் விடைத்தாளை முழுமை யாகப் பூர்த்தி செய்யமாட்டார்கள். தேர்வு முடிந்த பிறகு அவர்களது விடைத்தாட்களில் சரியான விடைகள் பூர்த்தி செய்யப்பட்டு, அவர்கள் அதிக மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுக் கல்லூரி களில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்’’ என நடந்த மோச டிகள் அனைத்தையும் ஒப்புக் கொண்டுள்ளார். இதோடு, ‘‘இம்மோசடிகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பதற் காக 2006-க்குப் பிறகு ம.பி. அரசில் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த ஒவ்வொருவருக்கும் 10 கோடி ரூபாய் இலஞ்சம் கொடுக்கப் பட்டுள்ளது’’ என்ற உண்மையையும் வாக்குமூலமாக அளித்திருக்கிறார், உப்ரித்.

உப்ரித்தின் வாக்குமூலத் தின்படி 58 சதவீத நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களும் இலஞ்சம் வாங்கிக் கொண்டு விற்பனை செய்யப் பட்டுள்ளதென்றால், கடந்த ஒன்பது ஆண்டுகளில் தனியார் மருத்துவக் கல்லூரி நிர்வாகங்கள் இந்த விற்பனை மூலம் சட்டவிரோதமாக அடித்திருக்கும் கொள்ளை ஏறத்தாழ 10,000 கோடி ரூபாயைத் தாண்டக் கூடும் எனக் குறிப்பிடுகிறார், வியாபம் ஊழலை அம்பலப் படுத்திய மருத்துவர் ஆனந்த் ராய்.

தனியார் மருத்துவக் கல்லூரி நிர்வாகத்திற்கு ஒதுக்கப்பட்ட 58 சதவீத இடங்கள் ஏல முறையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்றால், 42 சதவீத அரசு ஒதுக்கீட்டு இடங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்வதற்கு வியாபம் அமைப்பே தரகனாக வேலை பார்த்து வந்திருக்கிறது. குறிப்பாக, வியாபம் நடத்திய மருத்துவ நுழைவுத் தேர்வுகளில் நடந்துள்ள மோசடிகளுள் ஒன்றான ரயில் இன்ஜின்-பெட்டி முறை, அரசு ஒதுக்கீட்டு இடங்களைத் தனியார் மருத்துவக் கல்லூரி அதிபர்கள் கைப்பற்றிக் கொண்டு விற்பனை செய்வதற்கு ஏற்றவாறே உருவாக்கப்பட்டிருக்கிறது.

‘‘கடந்த 2010-11 ஆம் ஆண்டு தொடங்கி 2012-13 ஆம் ஆண்டு முடியவுள்ள மூன்றாண்டுகளில் மட்டும் அரசு ஒதுக்கீட்டின் மூலம் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இடம் ஒதுக்கப்பட்ட 721 மாணவர்கள் கடைசி நாள்வரை கல்லூரியில் சேராமல், மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கு கெடு விதிக்கப்பட்டுள்ள செப்.30 அன்று தமக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை நிர்வாகத்திடம் திரும்ப ஒப்படைத்துள்ளனர். இப்படித் திரும்ப ஒப்படைக்கப்பட்ட ஒவ்வொரு இடமும் ஒரு கோடி ரூபாய்க்கு நிர்வாகத்தால் விற்கப்பட்டுள்ளதாகக் கொண்டால், அந்த மூன்றாண்டுகளில் தனியார் மருத்துவக் கல்லூரி நிர்வாகத்திற்குக் கிடைத்த வருமானம் 721 கோடி ரூபாயாக இருக்கும்’’ என ம.பி.அரசின் சேர்க்கை மற்றும் கல்லூரிக் கட்டண ஒழுங்குமுறை கமிட்டி இம்முறைகேடு பற்றி அறிக்கை அளித்திருக்கிறது.

உப்ரித் கைது செய்யப்பட்டிருந்தாலும், வியாபத்தோடு சேர்ந்தும் தனியாகவும் தனியார் மருத்துவக் கல்லூரி நிர்வாகங்கள் நடத்தியிருக்கும் மோசடிகளும் கிரிமினல்தனங்களும் தனியொரு வழக்காக விசாரிக்கப்படவில்லை. வியாபம் நடத்திய தேர்வுகளில் நடந்துள்ள மோசடிகள் போலவே, தனியார் மருத்துவக் கல்லூரி சங்கம் நடத்திய ‘‘டிமாட்’’ தேர்வுகளில் (Dental and Medical Admission Test - DMAT) நடந்துள்ள மோசடிகளையும் உச்சநீதி மன்றத்தின் கண்காணிப்பின் கீழ் சி.பி.ஐ. விசாரிக்க வேண்டுமென கோரப்பட்ட மனு மீதான விசாரணையின்பொழுது, ‘‘டிமாட் தேர்வைத் தனியார் கல்லூரி அதிபர்கள்தான் நடத்தி வந்துள்ளனர். அவர்கள் பொதுஊழியர்கள் கிடையாது. எனவே, இந்த வழக்கை இலஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழ் விசாரிக்கவே முடியாது’’ என வாதிட்டுள்ளார், மைய அரசின் தலைமை வழக்குரைஞர் முகுல் ரோத்தகி.

•••

வியாபத்தில் நடந்துள்ள ஊழலும் மோசடிகளும், டிமாட் தேர்வுகளில் நடந்துள்ள ஊழலும் மோசடிகளும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். வியாபம் மருத்துவக் கல்லூரி நுழைவுத் தேர்வுகளுக்கு அப்பால், ஆசிரியர், போக்குவரத்து ஊழியர், உணவுப் பொருள் தரக் கட்டுப்பாட்டாளர், போலீசு துணை ஆய்வாளர், வனப் பாதுகாவலர் - எனப் பல்வேறு நிலை அரசுப் பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு கடந்த ஆறாண்டுகளில் 81 போட்டித் தேர்வுகளை நடத்தியிருக்கிறது. ஆசிரியர் வேலைக்கு மூன்று முதல் ஏழு இலட்ச ரூபாய் வரையிலும்; போக்குவரத்துத் துறையில் சேர்வதற்கு எட்டு முதல் 10 இலட்ச ரூபாய் வரையிலும்; போலீசு துணை ஆய்வாளர் பதவிக்கு பதினைந்து இலட்ச ரூபாய் வரையிலும் எனப் பதவிகளின் ‘‘வெயிட்’’டுக்குத் தக்கவாறு இத்தேர்வுகளில் இலஞ்சம் விளையாடியிருப்பதும்; அம்மாநில கவர்னர் ராம்நரேஷ் யாதவ்; அம்மாநில முதல்வர் சிவராஜ் சௌஹான்; ஆர்.எஸ்.எஸ். இன் முன்னாள் தலைவர் (சார்சங்க்சாலக்) கே.எஸ்.சுதர்சன்; ஆர்.எஸ்.எஸ்.இன் கூடுதல் பொதுச் செயலர் சுரேஷ் சோனி; பா.ஜ.க.வைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள், அக்கட்சியின் ‘தேசிய’த் தலைவர்கள் மற்றும் நீதிபதிகள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் - என அதிகாரத்திலுள்ள ஒரு பெரும் பட்டாளமே இந்த இரண்டு ஊழல்களிலும் (வியாபம் மற்றும் டிமாட்) கை நனைத்திருப்பதும், மருத்துவ சீட்டுகளையும், அரசுப் பதவிகளையும் பெற்று நேரடியாகப் பலன் அடைந்திருப்பதும் தக்க ஆதாரங்களோடு அம்பலமாகியிருக்கிறது.

● ம.பி. முதலமைச்சர் சௌஹான் மனைவியின் தங்கை மகள் ரேகா சிங் மற்றும் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த நீதிபதிகள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் உள்ளிட்ட 17 பேரின் வாரிசுகள் தனியார் மருத்துவக் கல்லூரி சங்கம் நடத்திய நுழைவுத் தேர்வுகளில் ‘வெற்றி’ பெற்று மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்திருப்பதை காங்கிரசு கட்சியின் ம.பி. மாநிலத் தலைவர் அருண் யாதவ் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தி பகிரங்கமாக அம்பலப்படுத்தியிருக்கிறார். சௌஹானின் நெருங்கிய உறவினரும் ம.பி.மாநில பிற்பட்டோர் கமிசன் தலைவருமான குலாப் சிங் கிராரின் மகன் 2011-ஆம் ஆண்டு நடந்த முதுகலை மருத்துவப் படிப்புக்கான நுழைவுத் தேர்வில் முதலிடம் பெற்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். அந்த கிரார் இப்பொழுது வியாபம் ஊழல் வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக சி.பி.ஐ.ஆல் அறிவிக்கப்பட்டுள்ளார். ம.பி. மாநில போலீசு டி.ஐ.ஜி. ஆர்.கே.ஷிவ்ஹரே, வியாபம் ஊழல் வழக்கில் தான் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக, தனது மகனுக்கும் மருமகளுக்கும் கிடைத்த மருத்துவக் கல்லூரி இடங்களைத் திரும்பக் கொடுத்துவிட்டார்.

ம.பி. முதலமைச்சர் சிவராஜ் சௌஹானின் மனைவி என்பதாலேயே, குற்றவாளிகள் பட்டியலில் சேர்க்காமல் தப்பவைக்கப்பட்டுள்ள சாதனா சிங்.



● மத்தியப் பிரதேச அரசின் எடை மற்றும் அளவீட்டுத் துறையில் ஆய்வாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மிஹிர் குமார் சௌத்ரி, ஆர்.எஸ்.எஸ். இன் முன்னாள் தலைவர் கே.எஸ்.சுதர்சனின் எடுபிடியாக இருந்தவர். வியாபம் ஊழல் தொடர்பாக ம.பி. போலீசால் மிஹிர் குமார் சௌத்ரி கைது செய்யப்பட்டதையடுத்து, ''விடைத்தாளில் எந்த பதிலையும் குறிக்காமல் கொடுத்துவிடு; உனக்கு வேலை கிடைத்துவிடும்'' என சுதர்சன் தன்னிடம் கூறியதாக வாக்குமூலம் அளித்தார். வியாபம் அமைப்பில் தேர்வுக் கண்காணிப்பாளராக இருந்து கைது செய்யப்பட்டுள்ள பங்கஜ் திரிவேதியும், உயர்கல்வித் துறை அமைச்சர் லட்சுமிகாந்த் ஷர்மாவின் தனி அதிகாரியாக இருந்து கைது செய்யப்பட்டுள்ள ஓ.பி.ஷுக்லாவும், மிஹிர் குமார் சௌத்ரிக்கு கே.எஸ். சுதர்சன் சிபாரிசு செய்ததை உறுதி செய்து சிறப்பு அதிரடிப் படையிடம் வாக்குமூலம் அளித்துள்ளனர்.



வியாபம் நிறுவனத்தில் நடந்த ஊழல்-மோசடிகளைப் பயன்படுத்திக் கொண்டு, தனது எடுபிடியாக இருந்துவந்த மிஹிர் குமார் சௌத்ரிக்கு அரசு வேலையை வாங்கித் தந்த ஆர்.எஸ்.எஸ்.இன் முன்னாள் தலைவர் கே.எஸ்.சுதர்சன்.

● 2012-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட வனக் காவலர் தேர்வில் கலந்துகொண்ட குறிப்பிட்ட ஐந்து விண்ணப்பதாரர்களைத் தேர்ச்சி பெறச் செய்வதற்காக ம.பி. ஆளுநர் ராம் நரேஷ் யாதவ், அந்த ஐந்து பேரிடமிருந்து தலா மூன்று இலட்ச ரூபாய் பெற்றதாக சிறப்பு அதிரடிப் படை குற்றஞ்சுமத்தி, முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தது. எனினும், ஆளுநராக இருப்பவரை விசாரணை செய்யும் அதிகாரம் சிறப்பு அதிரடிப் படைக்குக் கிடையாது எனக் குறிப்பிட்டு, ஆளுநர் ராம்நரேஷ் யாதவ் விசாரிக்கப்படுவதற்குத் தடை விதித்தது, ம.பி. உயர்நீதி மன்றம்.

● ஒப்பந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு நடத்தப்பட்ட தேர்வில் குறிப்பிட்ட பத்து விண்ணப்பதாரர்களைத் தேர்ச்சி பெறச் செய்வதற்காக அவர்களிடமிருந்து 30 இலட்ச ரூபாய் இலஞ்சம் பெற்றதாக ஆளுநரின் மகன் ஷைலேஷ் யாதவ் மீது சிறப்பு அதிரடிப் படை குற்றஞ்சுமத்தியிருந்தது. இது தொடர்பாக ஷைலேஷ் யாதவ் விசாரிக்கப்படுவதற்கு முன்பாகவே, அவர் மர்மமான முறையில் லக்னோவில் உள்ள அரசு பங்களாவில் இறந்து போனார். மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய் வெடித்து ஷைலேஷ் யாதவ் இறந்து போனதாகக் கூறப்பட்டு, அவரது மரணம் இயற்கையான மரணமாகச் சித்தரிக்கப்பட்டது.

● ம.பி. முதலமைச்சரான சிவராஜ் சிங் சௌஹான்தான் 2008 முதல் 2012 வரையில் மருத்துவக் கல்வித் துறையின் தலைவராகவும் இருந்தார். அந்தக் கட்டத்தில்தான் வியாபம் ஊழல் அதன் உச்சத்தைத் தொட்டது. சௌஹான் மருத்துவக் கல்வி தலைவராக இருந்த சமயத்தில்தான் அவரது மனைவியின் தங்கை மகள் ரேகா சிங்கிற்குத் தனியார் மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்கப்பட்டது.

சௌஹானின் மனைவி சாதனா சிங் போக்குவரத்து போலீசு தேர்வில் தனது சொந்த ஊரைச் சேர்ந்த 19 பேரைத் தேர்ச்சி பெறச் செய்யக் கூறி, வியாபம் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டதற்கான கைபேசி உரையாடல் ஆதாரங்கள் இருப்பதை காங்கிரசு கட்சி அம்பலப்படுத்தியிருக்கிறது. வியாபம் அலுவலகத்தில் இருந்த கணினிப் பதிவுகளை ஆராய்ந்து உண்மையைக் கண்டுபிடிப்பதற்காக சிறப்பு அதிரடிப் படையால் நியமிக்கப்பட்ட பிரசாந்த் பாண்டே, முதலமைச்சர் சௌஹான் 64 பேருக்கு சிபாரிசு செய்திருப்பதற்கான ஆதாரங்களை அம்பலப்படுத்தியிருக்கிறார். இந்த சிபாரிசு தொடர்பான விவரங்களும் ஆதாரங்களும் காங்கிரசு தலைவர் திக்விஜய் சிங் மூலம் ம.பி. மாநில உயர்நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் சௌஹானின் தனி உதவியாளராக இருந்த பிரேம் பிரசாத் யாதவ் மற்றும் அவரது குடும்ப மருத்துவர் அஜய் மேத்தா இருவருக்கும் வியாபம் ஊழலில் பங்கிருப்பது ஆதாரங்களோடு அம்பலமாகியிருக்கிறது. பிரேம் பிரசாத் யாதவ் முதலமைச்சர் அலுவலக தனி அதிகாரி என்ற தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தனது மகளுக்கு மருத்துவக் கல்லூரி இடத்தை வாங்கியிருப்பதோடு, இலஞ்சம் வாங்கிக் கொண்டு பல மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் வாங்கிக் கொடுத்திருக்கிறார் எனக் குற்றம்சாட்டியிருக்கிறது, சிறப்பு அதிரடிப் படை.

இவர்கள் தவிர, ஆளுநர் ராம்நரேஷ் யாதவின் தனி உதவியாளராக இருந்த தன்ராஜ் யாதவ்; மத்திய அமைச்சர்கள் உமா பாரதி, தர்மேந்திர பிரதான்; பா.ஜ.க.வின் தேசியத் துணைத் தலைவர் பிரபாத் ஜா; அக்கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர் சுதன்ஷு திரிவேதி, அக்கட்சியின் எம்.பி. அனில் தவே, அக்கட்சியின் முன்னாள் மத்திய அமைச்சர் விக்ரம் வர்மா மற்றும் அவரது மனைவியும் ம.பி.மாநில சட்டமன்ற உறுப்பினருமான நீனா வர்மா; ஆர்.எஸ்.எஸ். கூடுதல் பொதுச் செயலர் சுரேஷ் சோனி; ஆர்.எஸ்.எஸ்.-க்கு மிகவும் நெருக்கமான எல்.என். மருத்துவக் கல்லூரி இயக்குநர் அனுபம் சௌக்ஸி, அரபிந்தோ மருத்துவக் கல்லூரி அதிபர் வினோத் பண்டாரி, சாகர் கல்விக் குழுமத்தின் தலைவர் சஞ்சீவ் அகர்வால், துருபா கல்விக் குழுமத்தின் அதிபர் சுனில் தாதிர் உள்ளிட்ட பலருக்கும் இந்த ஊழல்களில் நெருங்கிய தொடர்பு இருப்பது ஒவ்வொரு நாளும் அம்பலமாகிவருகிறது.

(தொடரும்)

தலையங்கத் தொடர்ச்சி...

மணற் குவாரிகளையும் மூடக் கோரியும் போராடும் மக்களைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி, வழக்குப் போட்டு, சிறை யிலடைக்கும் போலீசும் எல்லா மட்ட நீதிமன்றங்களும் ஆளும் கட்சி காலிகளின் அராஜகங்களை வேடிக்கை பார்க்கின்றன.



ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு எதிராக அ.தி.மு.க. காலிகள் மதுரையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

இத்தனையும் எதற்காக நடத்தப் பட்டன? மோடி-ஜெயா சந்திப்பு, உறவு குறித்து தனிப்பட்ட முறையில் அவர்களை அசிங்கப்படுத்தும் வகை யில் இளங்கோவன் பேசினார். ஓட்டுக்கட்சி அரசியலில் இதெல் லாம் 'சகஜமப்பா' என்றாகிவிட்டது. 'காமராஜர்-ராஜாஜி காலத்தில் அரசியல் நாகரிகமாக இருந்தது. திராவிட அரசியல் புகுந்துதான் எல்லாம் பாழாகிவிட்டது' என்று அதே பல்லவி பாடப்படுகிறது. அது நிலவுடைமை, சாதி ஆதிக்கப் பிற்போக்கு அரசியல் என்று புதைக்கப்பட்டு அரை நூற்றாண்டாகி விட்டது. இப்போது அந்தப் பழங்கதையைப் பேசிப் புதுப்பிக்கும் முயற்சி பலிக் காது என்பது மட்டுமல்ல, அதற்கு மாற்றாக வந்த திரா விட, சுயமரியாதை, சமூகநீதி அரசியலும் அண்ணா-கருணாநிதியின் வெறும் சினிமா கவர்ச்சி அரசியலாகச் சீரழிந்து, இறுதியில் எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா கும்ப லின் பிழைப்புவாதப் பொறுக்கி அரசியலாகப் பரிண மித்தது. இப்போது அதை சாராயம்-கறி பிரியாணி-ரூபாய் நோட்டு பரிமாறுவதும், ரிக்கார்டு டான்சு, சினிமா நடிக-நடிகைகளின் காமெடி, கவர்ச்சிப் பேச்ச கள் மூலம் தேர்தல் பிரச்சாரம் என்று மக்களது ஆதர வைத் திரட்டுவதும், இவற்றுக்கு ஏற்பாடு செய்யும் பிர முகர்களையே சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் களாகவும் மேயர்களாகவும் அமைச்சர்களாகவும் நிய மிப்பதும், போலீசு, அரசு அதிகாரிகள், நீதிபதிகள் இலஞ்ச-ஊழலில் தாராளமாக மிதக்க அனுமதிப்ப தும், இவர்களையெல்லாம் வைத்துத் தேர்தல் தில்லு களில் தன்னை யாரும் வெல்ல முடியாதவாறு பிழைப் புவாதப் பொறுக்கி அரசியலை ஜெயலலிதா உச்சத் துக்குக் கொண்டுபோய்விட்டார்.

பழைய சினிமாக்களில் எம்.ஜி.ஆர்., என்.டி.ஆருடன் அரைகுறை ஆடையுடன் தான் போட்ட கவர்ச்சி ஆட்டங்களைக் கூச்சநாச்சமின்றி இன்னமும் ஒளிபரப்பித் தனது ரசிகர்களுக்குக் கிளு கிளுப்பூட்டிவரும் புரட்சித் தலைவியை இளங் கோவனுடைய பேச்சு அவமானப்படுத்தி விட்டதாகக் கூறித் தமிழகமெங்கும் மேற்படிக் கூத்துகள் நடக் கின்றன. ஆனால், இந்த ஜெயலலிதா என்னவெல்லாம் பேசி இப்போதைய நிலைக்கு வந்தார் என்பதை மக்கள் மறந்துவிட்டார்கள் என்ற துணிச்சலில் இப்படி ஆட்டம் போடுகிறார்கள்.

எம்.ஜி.ஆர்., ஜெயாவின் அரசியல் தலைவர் என்ப தற்கு மேல் என்ன உரிமையில், உறவில் அவரது பிண வண்டியில் ஏறித் தலைமாட்டில் உட்கார்ந்து அடாவடி செய்தார்! அவரோடு சேர்த்து உடன்கட்டைப் பேச்சுப் பேசினார்! எம்.ஜி.ஆருக்கு பாலில் விஷம் கொடுத்துக் கொன்றதாக ஜானகி மீது பழிபோட்டார்; எம்.ஜி.ஆரின் முன்னாள் நாயகி சரோஜாதேவியை மோர்க்காரி என்று வசைபாடினார். 'இராஜீவைக் கொன்ற குற்றவாளி' கருணாநிதியுடன் தேர்தல் கூட்டுவைத்த சோனியாவைப் பத்தினியா என்று கேட்டு, அவரது இத்தாலி பூர்வீகத்தைக் கேலி செய்தார். சட்டமன்றத் தில் தன்னைத் தி.மு.கழகத்தினர் மானபங்கபடுத்தி விட்டதாகத் தலைவிரி கோலத்துடன் நாடகமாடினார். அந்தப் புனிதவதி, தன் மீது சொத்துக் குவிப்பு வழக்குப் போடச் செய்தார் என்பதற்காக உயர் நீதிமன்ற வளாகத் துக்குத் தனது மகளிரணியை ஏவிவிட்டு, சுப்பிரமணிய சுவாமி முன்பாக ஆடையைத் தூக்கிக் காட்டி, ஆபாசக் கூச்சல் போடச் செய்தார்; சொத்துக் குவிப்பு வழக்குக்கு அனுமதியளித்தார் என்பதற்காக ஆளுநர் சென்னா ரெட்டி தன்னை மானபங்கப்படுத்த முயன்றதாகப் பகிரங்கமாகப் புளுகினார். இப்படித் தன்னைத்தானே இழிவுபடுத்திக் கொள்ளும் மாதரசியை இளங்கோவன் அவமானகரமாகப் பேசிவிட்டார் என்று கொந் தளித்துப் போகிறார்கள், அவரது கூலிப்படையினர்.

பணம் வாங்குவதற்காகவே தம்மைக் கற்பழித்து விட்டதாக போலீசு மீது புகார் கூறுகிறார்கள் என்று வெட்கமின்றி, மனச்சாட்சியின்றி தமிழ்ப் பெண்கள் மீது பழிபோட்டவர்தான், இந்த ஜெயலலிதா! இதை யெல்லாம் நினைவு கூர்ந்து சொல்லுங்கள்! எதையாவது செய்து, யாரையாவது அவதூறாகப் பேசி தன் மீது கவனத்தை ஈர்த்து அரசியல் ஆதாயம் அடைவது என்கிற ஜெயாவின் அதே அதிரடிப் பொறுக்கி அரசியல் உத்தியைத்தானே இளங்கோவன் கையிலெடுத்துக் கொண்டுள்ளார்! இதற்காக நாமோ தமிழக மக்களோ ஏன் அக்கறைப்பட வேண்டும்! ●

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...



சுத்தமல்லியில்...


மேலப்பாளையூரில்...


விருத்தாசலத்தில்...



ஓசூரில்...

உசிலையில்...



பென்னாகரத்தில்...


மதுரையில்...



திருச்சியில்...


திருச்சியில்...


கோவையில்...



புதுச்சேரியில்...

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.

# "மூடு டாஸ்மாக்கை!" போராட்ட சாட்சியங்கள்



தமிழகம் முழுவதும் டாஸ்மாக் கடைகளை மூட வலியுறுத்தி
மாணவர் போராட்டம் தீவிரம்

தமிழகத்தில் பல இடங்களில் மதுக்கடைகள் சூறை

முரசு

மாணவர்கள் மீது தடியடி
கருணாநிதி கடும் கண்டனம்

தினகரன்

தமிழகம் முழுவதும் டாஸ்மாக் கடைகளை மூடக்கோரி
போராட்டம் வலுக்கிறது

மாணவர்கள் மீது போலீஸ் கடும் தாக்குதல்

மதுவுக்கு எதிராக களத்தில் இறங்கிய மாணவர்கள்

அரசியல் கட்சிகளால் முடியாது
...ஒழிக்க தாய்மார்கள்,
...னால் மட்டுமே முடியும்
வைகோ அறிக்கை

...NAI, ARRESTED
Liquor shops attacked in Salem, Krishnagiri

*The shop that was functioning from a small room on Salem–Elampillai road.*

மாணவ, மாணவிகளை சந்தித்து
மு.க.ஸ்டாலின் ஆறுதல்

டாஸ்மாக் மதுக்கடைகளை மூடக்கோரி
தமிழகத்தில் போராட்டம் பரவுகிறது

சென்னையில் 36 இடங்களில் ஆர்ப்பாட்டம்; 1,254 பேர் கைது